# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. III** **Issue 9** **December 2013**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 8 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 9 |
| முடியாதது அன்னையை இடைவிடாது அழைத்தால் முடியும் . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம் . . . . . | 12 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 14 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் . . . | 21 |
| பூலோகத்தைச் சொர்க்கமாக்கும் பூரணயோக இரகசியங்களை நிறைவேற்றும் நன்னாள் எந்நாள்? . . . . . . . . . . . . . . . . | 29 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 32 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 35 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 37 |
| உதவி . . . . . . . . . . . . . . . . . . | 39 |
| சாதனைக்கு உதவும் விஷயங்கள். . . . . . . . . . . . . . . | 40 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 56 |
| மௌனம் . . . . . . . . . . . . . . . . . | 64 |


கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஜீவியத்தின் ஓசை**

கெட்ட குணம் விலகி
நல்ல குணம்
வந்தால்
கர்மம் விலகி
அருள் வரும்.



**அறிவிப்பு**

டிசம்பர் 2013 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVI. The Ascending Series of Substance

Page 255
Para 6

This is the material world.
Everything here is founded on the material principle.
Sense, Life, Thought are there,
They are founded on Earth-Power.
They start from it.
They obey the laws.
They accommodate their workings.
They limit themselves by its possibilities.
If they would develop others,
They have been in that development to take accounts of the original formula.
Its purpose and its demand upon the divine evolution.

The sense works through the physical instruments.
The life works through the physical nervous system.
It works through the vital organs.
The mind has to build its operations upon a corporeal basis.

And use a material instrumentation.
Even its pure mental workings have to take the data.

It is derived as a field.



## 26. உயரும் பொருளின் அடுக்குகள்

இது ஜட உலகம்.
இங்கு அனைத்தும் ஜட சட்டப்படி அமைந்துள்ளன.
உணர்வு, வாழ்வு, எண்ணம் உள்ளன,
பூமாதேவியின் சட்டம் அவற்றின் அஸ்திவாரம்.
அவை அங்கு ஆரம்பிக்கின்றன.
அச்சட்டங்கட்கு உட்படுகின்றன.
அவற்றின் செயலை அவை ஏற்கின்றன.
அந்தச் சந்தர்ப்பங்களால் அவை வரையறுக்கப்படுகின்றன.
மற்றதை அவர்கள் வளர்த்தால்,
அவ்வளர்ச்சியில் மூல சூத்திரத்தைக் காணலாம்.

அதன் காரியமும், தெய்வீகப் பரிணாமத்திற்கு அதன் தேவையும் வெளிப்படும்.
புலன்கள் உடலுறுப்புகள் மூலம் செயல்படுகின்றன.
வாழ்வு நரம்பு வழி வேலை செய்கிறது.
அவை நம் உயிருடைய உறுப்புகள் வழி செயல்படுகின்றன.
மனம் தன் செயலை உடலின் அடிப்படையில் அமைக்க வேண்டியுள்ளது.
ஜடமான கருவியைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.
தூய்மையான மனத்தின் செயலும் விவரங்களை ஏற்க வேண்டியுள்ளது.
அது செயல்படும் அரங்கமாகிறது.

And as a stuff upon which it works.
There is the essential nature of mind, sense, life.
There is no necessity that they should be limited.
There are the physical sense-organs.
They are not the creators of sense-perceptions.
But themselves the creation.
They are the instruments,
They are here a necessary convenience of a cosmic Life-force.
The brain is not the creator of thought.
But itself the creation.
It is an instrument of the cosmic Mind.
It is a necessary convenience.
The necessity is not absolute.
It is teleological.
It is the result of a divine cosmic Will.
Cosmic Will is in the material universe.
It intends to posit here something.

It is a physical relation between sense and its object.

It wishes to establish here a material formula,

It also wants a law of Conscious-Force,
It creates physical images of Conscious-Being,

It is to serve as the initial dominating factor,
It is the determining fact of the world where we live,
It is not a fundamental law of being,
But it is a constructive principle,
It is necessitated by the evolving Spirit.
Ours is a world of Matter.



அது செயல்படும் விஷயமாகிறது.
மனம், உணர்வு, வாழ்வின் மூலமான சுபாவமுண்டு.
அவை அளவுக்குட்பட வேண்டும் என்ற அவசியமில்லை.
உடலின் புலனுறுப்புகளுண்டு.
புலன் உணர்வை அவை ஏற்படுத்துவதில்லை.
இவ்வுறுப்புகள் அவ்வுணர்வால் சிருஷ்டிக்கப்படுகின்றன.
அவை கருவிகள்,
பிரபஞ்ச வாழ்வின் சக்திக்கு அவசியமான கருவிகள் அவை.
மூளை எண்ணங்களை உற்பத்தி செய்யவில்லை.
மூளையே எண்ணத்தால் சிருஷ்டிக்கப்பட்டது.
பிரபஞ்ச மனத்தின் கருவி மூளை.
அது அவசியமான வசதி.
தேவை முழுமையானதல்ல.
அவை பயன்படும் நிமித்தம் ஏற்பட்டவை.
அது தெய்வீக பிரபஞ்ச உறுதியின் விளைவு.
பிரபஞ்ச உறுதி ஜடப் பிரபஞ்சத்திலுள்ளது.
இங்கு அது ஒரு விஷயத்தை இருப்பதாகக் கொள்ள
முயல்கிறது.
அது புலனுக்கும், பொருளுக்குமிடையே உடலுக்குரிய
தொடர்பை ஏற்படுத்த முயல்கிறது.
ஜடமான சூத்திரத்தை இங்கு நிலைநிறுத்த அது
பாடுபடுகிறது,
சித்-சக்திக்குரிய சட்டத்தையும் அது நாடுகிறது,
தன்னையறியும் ஜீவனின் உடலுக்குரிய உருவங்களை அது
சிருஷ்டிக்கிறது,
அது ஆரம்பத்தில் ஆக்கிரமித்துக் கொள்வது,
நாம் வாழும் உலகை அது நிர்ணயிப்பது,
அது ஜீவனுக்குரிய அடிப்படை சட்டமில்லை,
அது நாம் ஏற்படுத்திய சட்டம்,
பரிணாம வளர்ச்சி பெறும் ஆன்மாவுக்கு அது தேவை.
நாம் வாழ்வது ஜடலோகம்.

Page 256
Para 7

There is a next grade of substance,
The initial, dominating, determining factor is life.
It is no longer substantial form and force.
It is life and conscious force.
There is a world beyond this material plane.
It is based on conscious cosmic Vital-Energy.

All these must be dominated by this initial fact.

Forms, bodies, forces, life-movements, sense-movements, thought-movements, developments, culmination, self-fulfilments are the All.
They all are dominated and determined by this factor.

It is a fact of Conscious-Life,
Matter and Mind subject themselves to that.
They start from that.
They base themselves on that.
They are limited by its laws or enlarge by them.

Their powers, capacities, limitations act like laws.
There is Mind. It can seek to develop higher possibilities,
Still it must take into account the original formula,
It is a vital formula of desire-force.
It has a purpose and a demand upon the divine manifestation.

Contd...



பொருளுக்கு அடுத்த நிலையுண்டு,
ஆரம்ப, ஆக்கிரமிக்கும், நிர்ணயிக்கும் அம்சம் வாழ்வு.
அது சக்தியோ ரூபமோ இல்லை.
அது வாழ்வு, தன்னையறியும் சக்தி.
ஜடலோகத்தைக் கடந்த லோகம் உண்டு.
அது தன்னையறியும் பிரபஞ்ச வாழ்வு சக்தியை அடிப்படையாகக் கொண்டது.
இவையனைத்தும் ஆரம்ப விஷயங்களால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.
எல்லாம் என்பது ரூபம், உடல், சக்தி, வாழ்வின் சலனம், புலனின் சலனம், எண்ணத்தின் சலனம், வளர்ச்சி, முடிவு, சுய-பூர்த்தி.
அவை ஆக்கிரமிக்கப்பட்டு, ஆரம்ப அம்சத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.
அது தன்னையறியும் வாழ்வின் விபரம்,
மனமும், ஜடமும் அதற்குட்படுகின்றன.
அவை அங்கு ஆரம்பிக்கின்றன.
அதை அவை அடிப்படையாகக் கொள்கின்றன.
அந்தச் சட்டங்கட்கு உட்பட்டும், அதனால் பெருகுவதும் உண்டு.

பவர், திறமை, வரையறை சட்டமாகச் செயல்படுகிறது.
அங்குள்ள மனம் உயர்ந்த வாய்ப்புகளை எழுப்பலாம்,
இருந்தாலும் அது மூலமான சூத்திரத்தைக் கருத வேண்டும்,
அது ஆசையின் சக்தியான வாழ்வுச் சட்டம்.
அதற்கு நோக்கமுண்டு. தெய்வீக சிருஷ்டியை அது வழி நடத்தும்.

தொடரும்...

இம்மாதச் செய்தி

# பொறுமை

# காலத்தைக் கடந்த

# நிலை





## Page 157: Waking and sleep lay locked in mutual arms
## விழிப்பும் தூக்கமும் கட்டியணைத்த கருணை

- ✡ ஆனந்தமும், வலியும் விவரமில்லாமல் வேறு வழியில்லாமல் வந்தன
- ✡ பிரபஞ்ச ஆத்மா லேசாக எழுந்து உடலில் புல்லரித்து நடுங்கிற்று
- ✡ அழ முடியாமல், அசையவும் முடியாமல் வாழ்வின் வலிமை எழுந்தது
- ✡ ஆழ்ந்த ஆனந்தம் அழகாகப் பாடிப் பரிமளித்தது
- ✡ பண்பு எழுப்பும் பவித்திரமான உணர்வைச் சொல்ல முடியவில்லை
- ✡ நம்மையறியாத உலகின் இதயம் இன்பமாகத் துடிக்கிறது
- ✡ மந்திர மயக்கத்துள் மறைந்தெழுந்து அசைகிறது
- ✡ புரியாத நிலையற்ற புல்லரிப்பு, தடுமாறிப் போகும் தாளம்
- ✡ மறைந்த நெற்றிக்கண்ணின் மங்கிய மறை பொருள்
- ✡ சிறு குழவி தன்னையறிந்து வளர்ந்தது, ஜனனம் பிறந்தது
- ✡ தெய்வம் விழித்தது, கனவில் லயித்தது
- ✡ தாளிட்ட கதவுகள் திறக்க மறுத்தன
- ✡ பார்க்கும் ஊனக் கண்ணுக்குப் பார்வையற்ற நிலை ஏற்பட்டு
- ✡ உருவமும், செயலும் உணர்த்தின. சிறைப்பட்ட தெய்வம் மறைந்தது
- ✡ வளரும் திறனின் சூட்சும சக்தியுள், அதன் நாடியில் வாழ்வு ஒளிந்தது
- ✡ ஜீவியம் பெற்ற ஒடுங்கிய ஊமைப் புலனின் தாள வரிசை
- ✡ எண்ணத்தை அறிய முடியாத அடங்கிய மனம்

✡ ஆத்மா வாழ்வை ஜடமாக ஏற்றது

✡ குரலெழுப்ப முடியவில்லை, அசைய அச்சப்பட்டது

✡ உலகின் சக்தி உள்ளே ஓடியது, உயிருள்ள சக்தி உணர்ச்சியாயிற்று

✡ காலை மண்ணில் ஊன்றி கடுமையாகப் பற்றியது

✡ தென்றலென எழுந்த சக்திக் கதிர்களின் ஊமை அதிர்ச்சி புல்லரித்தது

✡ அணைக்கும் ஆசையென அன்பாகப் பற்றின

✡ சூரிய ஜோதிக்கு ஏங்கும் வலிமையின் எழில்

✡ மூச்சும், உயிரும் தழுவும் இனிமையை உணர முடியவில்லை

✡ அழகும், வண்ணமும் பொருந்திய சத்தியம் கனவாக வந்து, கவர்ந்து மறைந்தது

✡ முடிவாக, மந்திரக் கட்டுண்ட மாபெரும் மலை எட்டிப் பார்த்தது

✡ அசைந்து, அதிர்ந்து, ஆசைப்பட்டு அது மனத்தைத் தேடியது

✡ அதன்பின் புலப்பட்டது புலன், எண்ணம் எட்டிப் பார்த்தது

✡ மறுக்கும் அச்சை ஏற்கப் பணித்தது

✡ மந்திரமாயம் செதுக்கப்பட்ட ரூபத்தின் விழிப்பு

✡ சமாதியிலிழந்த ஜீவன் சுருதி கூட்டிச் சட்டென எழுந்தது

✡ ஒளிமயமான அலையின் அசைவு மூளையையும், நரம்பையும் சுண்டியிழுத்தது

✡ ஆன்மாவின் அடையாளம் ஜடத்தில் விழித்தது

✡ உடலின் அற்புதம் ஜோதியாக எழுந்தது



## முடியாதது அன்னையை இடைவிடாது அழைத்தால் முடியும்

கர்மயோகி

முடியாதது அன்னையை இடைவிடாது அழைத்தால் முடியும்.
**Calling makes the impossible possible.**
அழைப்பே அனைத்தும்.
ஆழத்திலிருந்து அழைப்பதே அழைப்பு.
அழைப்பால் முடியாதது கேள்விப்படாதது.
முடியும்வரை அழைப்பதே அழைப்பு.
அழைப்பு ஒரு குரலில் சாதிக்கும்.
ஒரே குரலில் சாதிப்பதே அழைப்பு.
மனத்தைக் கடந்த குரல் மதருடைய குரல்.
அழைப்பை அறிந்தவர் அறிவதற்கு ஒன்றுமில்லை.
அன்னையை ஏற்றவர்க்குக் கேட்டதெல்லாம் கிடைக்கும்.
அன்னை ஏற்றவர்க்குக் கேட்பதற்கு ஒன்றுமில்லை.
வாயால் அழைத்தால் சொல் பலிக்கும்.
நெஞ்சால் அழைத்தால் உணர்ச்சி பலிக்கும்.
நெஞ்சைக் கடந்து அழைத்தால் அன்னை பலிக்கும்.
அன்னை வருவது, அகிலம் வருவது.
அன்னையே வந்தபின் அடுத்தது ஏது?
அகிலம் முழுவதும் அன்னை என்ற சொல்லினுள்.
அழைப்பின் உயர்வு அன்னை அழைப்பது.
ஆழத்தில் அழைப்பும் மறந்தபின் எழுவதே அழைப்பு.
அது அன்னையே தன்னை அழைப்பது.
அது ஆத்மாவின் அன்னை.
அதைக் கடந்தது கரணங்களின் அன்னை.
முடிவானது செயலின் அழைப்பு.

★★★

## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/4. உள்ளதே உலகம் என உணரும் அறிவு அறியாமை.

- கண்டதே காட்சி கொண்டதே கொள்கை என்பது ஒரு வகை வாழ்வு.
- கோடீஸ்வரன் என்ற பெயரிருப்பதால் அவனைக் கோடீஸ்வரனாகக் கொள்வது பொருத்தமற்றது. அவன் வசதியற்றவனாகவுமிருப்பான்.
- தோற்றத்தின் பின்னேயுள்ளதே அறிவு.
- அறிவைத் தேடுவது அறிவுடைமை.
- ஒரு பிரெஞ்சு கவர்னர் மக்கள் விநாயகரை வணங்குவது மூட நம்பிக்கை என நினைத்தார். அது கல் என நினைத்தார். கல் விக்ரஹமாகும் என்ற பண்பை அறியாதவர். பிள்ளையாரை நடுக்கடலில் போட உத்தரவிட்டார். மறுநாள் கல் கல்லல்ல, உயிருள்ள தெய்வம் என கோயிலிலிருந்தது! கோவில் – மணக்குள விநாயகர் கோயில் – பிரபலமாயிற்று.
- திரௌபதி அம்மன் திருவிழாவில் தீ மிதிப்பதுண்டு. இதைக் கண்ட மேல் நாட்டினர் விவரம் விசாரித்தனர், ஆராய்ந்தனர். நெருப்புப் புண்ணாகச் சுடாததற்குக் காரணம் மனவுறுதி எனக் கண்டனர். சொந்த ஊரில் தீமிதி விழா நடத்தி இது தெய்வ சக்தியல்ல, மனோபலம் என அறிவித்தனர்.
  பக்தர்கள் விரதத்தால் பெறும் திறனை, மனோதிடத்தால் பெற பல சூத்திரங்களை எழுதிப் பயின்றனர்.
  கொஞ்ச நாள் கழித்து தீ மிதித்தவர் நெருப்பில் விழுந்தனர். அத்துடன் அவை நின்றன.
- தீ மிதிப்பது மனோதிடம் என்பது உண்மை. அது ஒரு அம்சமே. எளிய மனிதனும் விரதத்தால், பக்தியால் பெறுவதைப் படித்தவர் பெற்றனர். நம் நாட்டில் அது பரம்பரையான பழக்கம். நாடு முழுவதும் ஏற்ற நெடுநாள் கொள்கை.
  மேல் நாட்டில் அது புதியது, பாரம்பரியமில்லை, ஏதோ சிலர் ஏற்றது. பலிக்க சிரமம், நெடுநாள் நீடிக்காது.



- கண்ணால் கண்டதைக் கண்டதாக நம்புவது அறியாமை.
- விஞ்ஞானம், சாஸ்திரம், சடங்கு, சங்கீதம், விளையாட்டு ஆகியவை எந்தத் துறையிலும் கண்டதை நம்புவது தவறு எழ வழி செய்யும்.
- திருமணத்தில் சீதனம் கேட்காதது இலட்சியம் என்பது நாம் காண்பது.
  சீதனம் கேட்காத வரனுக்கு எவரும் பெண் கொடுக்க முன்வருவதில்லை.
  இலட்சியத்தை நாடுபவர் அதனுள் உள்ள சூட்சுமத்தை அறிவதில்லை.
  வரனுக்குக் குறையிருப்பதால் சீதனம் கேட்கவில்லை எனக் கருதுகிறார்கள்.
- மேல் நாட்டில் ஆண் பெண்ணை நாடி திருமணம் பேசுவான். எந்தப் பெண்ணும் முதல்முறை ஏற்க மாட்டாள். பலமுறை கேட்டபின் ஏற்பது வழக்கம்.
  டால்ஸ்டாய் கதையிலும், டிராலப் கதையிலும் கேட்டவுடன் ஏற்ற பெண்ணை வரன் வெறுக்க ஆரம்பித்து விட்டான்.
  **கிராக்கி பெண்ணுக்கு மரியாதைத் தருகிறது.**
- ஒரு காலத்தில், ‘கடல் முடிகிறது, அதைக் கடந்தால் கப்பல் பாதாளத்தில் விழும்’ என நினைத்தனர்.
  சரளமாகப் பேசுபவனை இன்றும் அறிவாளி என உலகம் நினைக்கும். உயர்ந்த உடை மனிதனை உயர்ந்தவனாக நினைக்கத் தோன்றும்.
  **தோற்றமும், விஷயமும் மாறுபடும்.**

### ஜீவிய மணி

*அறியாமையை ஆயுள் முழுவதும் விலக்கலாம். ஞானத்தை க்ஷணத்தில் பெறலாம். அறியாமை ஆயுள் வரம். ஞானம் க்ஷணச்சித்தம்.*

## நெஞ்சுக்குரிய நினைவுகள்

### *தனிப்பட்ட வகையில் சிறப்பெழும் முத்திரை*

கர்மயோகி

- நாடு சுதந்திரத்தை இழந்தாலும், சுபிட்சம் போய் வறுமை வந்தாலும், அடிப்படையான பெரிய கருத்துகளை மக்கள் மறந்துவிடுகின்றனர்.
- அமெரிக்காவில் சுதந்திரம் சுபிட்சமாகத் தழைத்தது.
- இங்கிலாந்து சீமாட்டிகளைவிட அமெரிக்கப் பன்றிகளுக்கு உயர்ந்த போஷாக்குண்டு என்பது உண்மையாயிற்று.
- அந்நிலையில் இது போன்ற பெரிய உண்மைகள் வெளிவந்தன. அவை
  - எவரும் எதையும் செய்ய முடியும்.
  - தீராதப் பிரச்சனை இல்லை.
  - வாழ்வில் பிரச்சனையில்லை.
  - வாழ்விலில்லாத பெருவசதிகளில்லை.

இது போன்ற எண்ணங்களை அவர்கள் நம்பியதால் இன்று கூலிக்கார நாடாக ஆரம்பித்த அமெரிக்கா உலகை ஆள்கிறது.

- அமெரிக்கா பெற்ற சுதந்திரம் சுபிட்சம் கொடுத்தது. தெம்பும், நம்பிக்கையும் கொடுத்தது. இது வாழ்க்கைக்குரிய வரப் பிரசாதம்.
- அன்னை கொடுப்பது யோக சுபிட்சம்.

  வாழ முடியாத மனிதனுக்கு யோகமே உண்டு என்ற வாய்ப்பைக் கொடுக்கிறார்.

  அது வளம் உபரியாகும் வாழ்வு என்பதைக் காணாதவரிலர்.

  யோகங்களில் சிறந்தது ஞான யோகம்.

  மனத்தின் ஒரு பகுதியான எண்ணத்திற்குரிய யோகம் ஞான யோகம்.

  ஞாபகம், சிந்தனை, கற்பனை, விவேகம், முடிவு, தீர்மானம், தீர்க்க தரிசனம், பகுத்தறிவு, பிரித்துணரும் நுட்பம், புலன்களைக் கடந்த அறிவு, என்பன மனத்தின் பகுதிகள்.



  மனத்திற்கு மேற்பகுதி ஜீவியம், அடிப்பகுதி வலிமையானது பொருள் **(Consciousness, Substance).**

  இந்தத் தகுதிகளை ஜீவியத்திலும், பொருளிலும் சேர்த்து மனத்தை முழுமையாக்கி முழுமனத்தை மையமாக்கிய யோகம் ராஜ யோகம்.

  ராஜ யோகம் மனிதருள் மாணிக்கமானவர் செய்வது என்பது பதஞ்சலியின் முடிவு.

  கீதை கூறும் யோகம் அதைக் கடந்தது.

  ராஜ யோகம் மனத்தாலும், பிராணனாலும், உடலாலும், ஆசனம், பிராணாயாமம் மூலமாகவும் செய்வதை கீதை சர்வ தர்மங்களையும் சரணம் செய்து பெற அழைக்கிறது.

  பூரண யோகம் கீதை முடியுமிடத்திலிருந்து ஆரம்பிக்கிறது என்கிறார் பகவான்.

  கீதை மனத்தின் நம்பிக்கைகளைச் சரணம் செய்யச் சொல்கிறது.

  அதைக் கடந்த முழு மனமும் சரணாகதிக்குரியது.

  மனத்தைக் கடந்து உணர்வின் உறைவிடமான இதயமும் சமர்ப்பணத்திற்குரியது.

  அதையும் கடந்து உடலும் சமர்ப்பணத்திற்குரியது.

  இவை மூன்றும் சேர்ந்த ஜீவனையும் சமர்ப்பணம் செய்வது பூரணயோகம்.

  இது மனிதனுக்குரிய யோகமல்ல.

  மனிதனுக்குரியது சரணாகதி மட்டுமே.

  இந்த யோகத்தின் தலைவன் இறைவன்.

  இறைவன் மட்டும் செய்யக் கூடிய யோகமிது என பகவான் கூறுகிறார்.
- அன்னையை அறிந்தவர் எவருக்கும் இந்த யோகம் செய்யும் தகுதியுண்டு.
- உரிமையை அன்னை தருகிறார்.
- உரிமை நம்பிக்கையால் தகுதியாகிறது.
- செய்ய ஆரம்பித்தால் நடுவில் நிறுத்தக் கூடாது என The Life Divine முதல் அத்தியாயத்தில் பகவான் கூறுகிறார்.
- கை விடாமல் செய்பவருக்குக் கைமேல் பலன்.

  அன்னையை அறிவது பாக்கியம்.

அருகிலுள்ளவரும் அறிவதில்லை, ஏற்பதில்லை, நம்புவதில்லை.

அறிவது நம்புவதால், ஏற்பதால் பூரணம் பெறுகிறது.

தனிப்பட்ட வாழ்வில், கடந்த கால வாழ்வில் நிகழ்ந்தவைகளை நினைத்துப் பார்த்தால் எவராலும் முடியாத காரியங்கள் நம் வாழ்வில் நம்மால் செய்யப்பட்டிருப்பது தெரியும்.

- சிறப்பான நம்பிக்கை எளிதாக எழுந்து, குதூகலமாக மாறுவதைக் காணலாம்.
- இயல்பாக மனமும், உணர்வும் அன்னையை நாடுவது தெரியும்.
- அனைவருக்கும் எழும் பிரச்சனைகள் நம் வாழ்வில் எழுந்திரா.
- நம் முயற்சிக்கு எதிர்பாராமல் பலரும் உதவ முன்வந்தது தெரியும்.
- நாம் செய்யும் காரியங்கள் மற்றவர்க்குப் பலிப்பதைவிட அதிகமாகப் பலிக்கும்.
- மரண பயமிராது.
- நாம் வாழுமிடங்களில் அடுத்தவர் பிரச்சனை எளிதில் தீர்வதைக் காணலாம்.
- உலகம் தேடிப் போவது, நம்மை நாடி வருவதைக் காணலாம்.
- பூரணயோக வாயில்கள் என்ற தலைப்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இந்த அம்சங்களை எடுத்து மலர்ந்த ஜீவியத்தில் விளக்கி எழுதியுள்ளேன்.
- இதர அம்சங்கள் அன்பர் வாழ்வில் எழலாம்.
- இலட்சியத்தை மேற்கொள்பவர் உடல், பொருள், ஆவியை அர்ப்பணிப்பது வழக்கம். இங்கு ஆத்மாவையும் சேர்த்து அர்ப்பணிக்க வேண்டும்.
- எவருக்கும் எளிதில் நம்பிக்கை ஏற்படாத விஷயங்களில் நமக்கு நம்பிக்கை ஏற்படுவது தெரியும்.

**Past Consecration *கடந்த கால சமர்ப்பணம்*.**

- இது தவற்றை விலக்கும், திருத்தும், திருவுருமாற்றும்.
- நல்லதை மேலும் நல்லதாக உயர்த்தும்.



- கடந்தகால சமர்ப்பணம் காலத்திற்கும் நம்முடன் வர வேண்டியது.
- சமர்ப்பணம் சகலத்தையும் அர்ப்பணம் செய்வது.

  கடந்த கால சமர்ப்பணம் காலத்தையும் சமர்ப்பணத்தால் புனிதப்படுத்துகிறது.
- உயர்ந்தவை, உன்னதமானவை, உடனே சமர்ப்பணத்தால் பலிக்கும்.
- சமர்ப்பணத்தின் சிகரம்: நாம் உள்ளே உலகம் என அறிவது.
- யோகம் புனிதமானது.
- சமர்ப்பணம் யோகத்தைப் புனிதமாக்கும் துறை.
- சமர்ப்பணத்தால் சொல் அழியும்.
- சமர்ப்பணம் மனத்தைக் கரைக்க ஆரம்பிக்கும்.
- கரைந்த மனம் மௌனத்தின் திருவுருவமாகும்.
- மௌனம் பிரம்மத்தை நோக்கிப் பயணம் செய்யும்.

***சமர்ப்பணம்***

பகவான் இதை **Self-Consecration** சமர்ப்பணம் என்று கூறாமல் பிரம்ம-சமர்ப்பணம் எனக் கூறுகிறார்.

**Self-** (பிரம்மம்) என்பது சச்சிதானந்தத்தைக் குறிக்கும்.

எண்ணம், உணர்ச்சி, செயல், ஜீவன் ஆகியவற்றை இறைவனுக்கு, பிரம்மத்திற்குச் சமர்ப்பணம் செய்வது பிரம்ம சமர்ப்பணம்.

நமக்காக வாழ்வதற்குப் பதிலாக இறைவனுக்காக வாழ முடிவு செய்ததைச் சமர்ப்பணம் பூர்த்தி செய்யும்.

**First Fundamental Siddhi** முதல் அடிப்படையான சித்தியின் மூன்று அம்சங்கள்

1. நெஞ்சில் அன்னை தரிசனம் தருவார்.
2. பிறரில் அன்னை தரிசனம் தருவார்.
3. அன்னை மேலுலகில் உள்ள இடத்தில் தரிசனம் தருவார்.

பகவான் அலிப்பூர் சிறையில் பெற்ற சித்தி இது.

இது சத்திய ஜீவிய சித்தி.

சமர்ப்பணத்தைப் பல வகைகளாக விவரிக்கலாம்.

1. ரிஷிகள், நிஷ்டையால் மேல்மனத்திலிருந்து சூட்சுமமான உள்மனம் சென்றனர்.

   நிஷ்டை எண்ணத்தால் செயல்படுவதால் அது பகுதி.

   பூரண யோகத்தில் சமர்ப்பணத்தால் உள்மனம் செல்கிறோம்.

   சமர்ப்பணம் முழுமன உறுதியைச் சமர்ப்பணம் செய்வதால் முழுமை. ரிஷிகள் கண்டது புருஷன்.

   பூரண யோக சமர்ப்பணம் காண்பது இறைவனின் முழு நிலையான மூன்று அம்சங்கள்.
2. ஒரு முறை சமர்ப்பணம் செய்தால் மோட்சம் கிடைக்கும். மோட்சத்தை ஏற்றால் பூரண யோகம் பலிக்காது.
3. சமர்ப்பணம் நேரடியாக அகந்தையைக் கரைக்கும்.
4. வாழ்வில் சமர்ப்பணம் பிரச்சனைகளைத் தீர்க்கும்.

   அன்பர் முழுமையான யோக சமர்ப்பணம் செய்ய முடியாவிட்டால் அன்னையிடம் கூறுவதே அவர் சமர்ப்பணம். அதுவே பிரச்சனையைத் தீர்க்கும்.
5. பிரச்சனையைத் தீர்க்கும் சமர்ப்பணம் (அன்னையிடம் கூறுவது) ஓட்டுப் போடும் உரிமை போன்றது. யோக சமர்ப்பணத்திற்கு முதல் நிலையில் அகந்தை கரையும்.

   இரண்டாம் நிலையில் ஜீவன் பிரபஞ்ச ஜீவனாகும். முடிவான நிலையில் ஈஸ்வரனாகும்.

   முதல் நிலை - அகந்தை கரைந்தால் மனிதனுக்கு அஞ்ஞானம் கரைகிறது.

   முழுமையாக அகந்தை கரைந்தால் பிரபஞ்ச ஆத்மாவாகி (ஜீவன்) பின் மூன்றாம் நிலை முடிவான நிலையில் ஆத்ம, புருஷ, ஈஸ்வர அம்சங்களை உட்கொண்ட (மனிதன், பிரபஞ்சம், காலத்தைக் கடந்த நிலை) முழு ஈஸ்வரனாவான்.

   எளிய சமர்ப்பணம் ஓட்டுரிமை.

   முடிவான சமர்ப்பணம் **MLA**, **MP**, மந்திரி, முதன் மந்திரி, பிரதம மந்திரி, ஜனாதிபதி ஆகிய கட்டங்களை எட்டும்.

   சமர்ப்பணம் அகந்தையைக் கரைக்கும்.

   ஆனால் அகந்தை ஆழ நம்முள் வேரூன்றியது.



ரிஷிகள் அகந்தைக்கும், சத் புருஷனுக்கும் உள்ள வேறுபாட்டை அறிய சிரமப்பட்டனர்.

அகந்தையின் கபடு எவரையும் ஏமாற்றவல்லது.

அகந்தையைக் கரைக்க நாம் எந்த முறையைக் கையாண்டாலும் அகந்தை முன்வந்து தானே அதைச் செய்ய விழையும்.

ஏமாறாமலிருக்க முடியாது.

ஏமாந்தால் முடிவில் அகந்தை தன்னை வலுப்படுத்திக் கொள்ளும்.

இதிலிருந்து தப்ப பகவான் கூறும் வழி.

அகந்தையை விட்டு, அன்னையை நாடி, அன்னையை வலுப்படுத்தினால் அன்னை நம்மை (அகந்தையை) நோக்கி வருவார்.

அன்னை நெருங்கி வந்தால், அகந்தை சுருங்கும்.

அன்னை நம்மையடையும் பொழுது அகந்தை இராது.

***அகந்தை கரைய அன்னை கூறும் வழி***

நாம் சமர்ப்பணம் செய்தால், சமர்ப்பணம் செய்பவர் ஒருவர் இருப்பதால் அகந்தை அந்த உருவில் கரைய மறுக்கும்.

அதனால் அன்னை இறைவனை நோக்கி, ‘நீ, நீ, நீ, நீ மட்டும் வேண்டும்’ என்று கூறுகிறார். அதனால் அகந்தைக்கு இடம் இருப்பதில்லை.

– எல்லாச் செயல்களையும் சமர்ப்பணம் செய்யாமல், சமர்ப்பணம் பூர்த்தியாகாது.
– மூச்சு விடுவது நடுவில் தடைப்படக் கூடாது.
– அதுபோல் சமர்ப்பணம் பலிக்க ஆரம்பித்தால், அது முழுமையடையும்வரை நிறுத்தக் கூடாது.

  முழுமையானபின் அவ்வுயர்ந்த கட்டத்திலேயே நிலைக்க வேண்டும்.

  விமானம் பறக்கும்பொழுது, சில நிமிடம் பறப்பதை நிறுத்த முடியாது.
– ஒருவருக்கு இது பலிக்க அவர் அந்த உச்சிக்குப் போய் அங்கேயே 30 வருஷமிருக்க வேண்டும் என்கிறார் அன்னை.

அன்னை சூழலில் சமர்ப்பணம் பயின்றால், இந்த உயரத்திற்குப் போய் 3 மாதம் இருந்தால் சமர்ப்பணம் பூர்த்தியாகும்.
இது சூழலுக்குரிய ஆன்மீகத் திறன்.

– சமர்ப்பணம் முதல் நிபந்தனை.
சமர்ப்பணம் பூர்த்தியாவது யோகம் ஆரம்பிக்க அவசியம்.
– சமர்ப்பணத்தின் சில அம்சங்கள்:
  - சிந்தனை நின்று விடும்.
  - நினைவு அழியும்.
  - எச்சரிக்கை (censor) - மனம் பேசும் திறன் - அழியும்.
  - வாழ்வில் பிரச்சனைகள் இரா.
  - நேரம் போவது தெரியாது.
  - எரிச்சல் மூட்டும் விஷயங்கள் எரிச்சலைக் கிளப்பாது.
  - அமைதி உள்ளே சேர்ந்து வளரும்.
  - கடுமையான வெய்யில் குளிர்ந்த தென்றலாகத் தோன்றும்.
  - நம் முயற்சியின்றி வாழ்வு நிலை (status) உயரும்.
  - நம் வயது, படிப்பு, தொழிலுக்கு மேற்பட்ட மரியாதை எழும்.
  - எவரைச் சந்தித்தாலும் அவர்மீது அபரிமிதமாகப் பிரியம் எழும்.

### ஜீவிய மணி

கர்மத்தை நம்பாமல், அருளை நம்பினால் கர்மம் அழியும். அடுத்த கட்டத்தில் திறமையை நம்பாமல், அருளை நம்பினால் அருள் பேரருளாகும். கர்மம் அழிந்து, திறமையால் முன்னேற அருள் உதவும். கர்மம் அழிந்து, திறமை விலகி, அருள் நேரடியாக, அது மட்டும் நம் வாழ்வில் செயல்படும்பொழுது பேரருளாகும். கர்மத்தால் காரியம் தடைப்படும். கர்மம் அழிந்தால், அருள் மூலம் திறமை குறைந்த காலத்தில் பலன் தரும். கர்மம் அழிந்து, திறமையில் நம்பிக்கை அழிந்தால், பேரருள் முதலிலேயே பலனைத் தரும்.



## அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### 19. அன்னையும், அமுதசுரபி வாசகர்களும்

1

வட இந்தியாவில் வாழ்ந்து வரும் 'அமுதசுரபி' வாசகர் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதி இருந்தார். அது மார்ச், 8-ஆம் தேதி எழுதப்பட்ட கடிதம்.

அவர் அதில் எழுதியிருந்தார்: நீங்கள் 'அமுதசுரபி'யில் எழுதி வரும் அன்னையைப்பற்றிய கட்டுரைகளைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நானும், என் கணவரும் தவறாமல் படித்து வருகிறோம். அதன் காரணமாக, நாங்கள் அன்னையின் பக்தர்களாகி விட்டோம்.

இப்பொழுதெல்லாம் நாங்கள் எங்களுடைய பிரச்சனைகளை அன்னையிடம் ஒப்படைத்து விடுவது வழக்கம். அந்தப் பிரச்சனைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்ந்துப்போய் விடுகின்றன. ஆனால் புதுப்புதுப் பிரச்சனைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அதனால் எங்களுடைய நம்பிக்கை சில சமயங்களில் கலகலத்துப்போய் விடுகின்றது.

தற்சமயம் குளவியைப் போல எங்களைக் கொட்டிக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் இரண்டு. ஒன்று என் கணவரின் உத்தியோக உயர்வு. இரண்டு, எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கடன்.

என் கணவருக்கு எப்பொழுதோ கிடைத்திருக்க வேண்டிய உத்தியோக உயர்வு, இன்னும் கிடைத்தபாடாக இல்லை. இனி மேலாவது கிடைக்குமா என்பதும் சந்தேகமாக இருக்கின்றது. ஏனென்றால் என் கணவருக்கு உத்தியோக உயர்வு கிடைத்து விடக் கூடாது என்று யாரோ ஒருவர் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்.

இரண்டாவதாக கடன். சமீபத்தில் நிறையக் கடன் வாங்கி ஒரு வீடு கட்டினோம். கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு கடனையும் அடைக்க வேண்டும்; குடும்பத்தையும் நடத்த வேண்டும் என்றால், இந்தக் காலத்தில் அது சாத்தியமா? பாரத்தையும், கடனையும் சுமந்து சுமந்து தலை சுற்றுகிறது; விழி பிதுங்குகிறது.

இந்த இரண்டு பிரச்சனைகளையும் நாங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? மனித யத்தனத்தில் எதுவும் முடியும்போல இல்லை. அன்னையைத்தான் நாங்கள் மலையைப்போல நம்பிக் கொண்டிருக்கின்றோம். ஒரு தடவை தியான மையத்திற்கு வந்து ஸ்ரீ அரவிந்தர் - அன்னையைத் தரிசிக்க வேண்டும் என்று தீவிரமாக நினைக்கின்றோம். ஆனால் அதற்குத் தேவையான வசதி இல்லாததால், பயணம் ஒத்திப் போய்க்கொண்டே இருக்கின்றது.

எல்லாவற்றுக்கும் அன்னையின் அருளையே நம்பிக் கொண்டு இருக்கின்றோம். அன்னை எங்களுக்கு அருள் செய்வார் என்பதை நீங்கள்தாம் கூற வேண்டும்.

அந்த அன்பருக்கு நான் பதில் எழுதி அனுப்புவதற்குள் அவரிடமிருந்து இரண்டாவது கடிதம் வந்துவிட்டது.

இந்தச் சமயத்தில் எல்லா வாசக அன்பர்களுக்கும் நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் பிரச்சனைகள் அதிகம். அல்லற்படுத்தும் அந்தப் பிரச்சனைகளை எல்லாம் அறவே நீக்கி உதவுகின்றது அளப்பரிய அன்னையின் அருள் என்பதை முன்பெல்லாம் ஐரோப்பிய நாட்டு அன்பர்களே அதிகம் தெரிந்து வைத்துக் கொண்டு இருந்தார்கள். இப்பொழுது ‘அமுதசுரபி’யின் மூலம் தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் அன்பர்களும் அதிகம் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். அதனால் தம் பிரச்சனைகளைத் தெரிவித்து எழுதும் அன்பர்களின் கடிதங்கள் நாள்தோறும் பெரும் எண்ணிக்கையில் எனக்கு வந்து கொண்டு இருக்கின்றன.

ஒவ்வொன்றும் பிரச்சனை; ஒவ்வொன்றும் ஒவ்வொருவரின் வாழ்க்கை. இதை நான் மிக நுணுக்கத்துடன் அணுக வேண்டும்.



பிரச்சனைகள் வெளியே இருந்து வருவதில்லை. அவை நமக்குள் இருந்துதான் கையும், காலும் முளைத்து விஸ்வரூபம் எடுக்கின்றன. சம்பந்தப்பட்டவரே பிரச்சனையின் அடிப்படையை, மூலவேரை அறிந்திருப்பதில்லை. ஒருவேளை அறிந்திருந்தாலும் மறக்காமல் அதை நினைவில் வைத்திருப்பதில்லை. இந்தச் சிக்கலை எடுப்பது என் வேலையின் முதற்கட்டம். இதைத் தொடர்ந்து பல கட்டங்கள் இருக்கின்றன. இறுதியாக அன்னையின் கோட்பாட்டுக்குள் அன்பர்களின் பிரச்சனைகளைக் கொண்டுபோய் அன்னையின் அருள் வெளிச்சத்தில் அவற்றின் இருளைத் துடைத்து நான் ஒரு பதிலை எழுத வேண்டும்.

கையால் வாங்கிய கடிதங்களுக்குக் கையால் எழுதப்படுகின்ற கடிதங்கள் அல்ல அவை. நெஞ்சாலே பெறப்படுகின்ற கடிதங்களுக்கு அன்னையின் அருளை நிரப்பி அனுப்ப வேண்டிய நிலை.

‘கையிலே காசு வாயிலே தோசை’ என்கிற லௌகீக அவசரங்களுக்கெல்லாம் இதில் இடம் இல்லை; இருக்கவும் கூடாது. வரும் கடிதங்கள் அதிகமாக அதிகமாக, எவ்வளவுதான் விரைவாக பதிலை அனுப்பினாலும்கூட, இடையிலே ஏற்படுகின்ற கால தாமதம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது.

தாமதத்தையும் தபஸாக நினைத்து விட்டால், பிரச்சனையின் வெப்பம் சிறிது தணிந்து போய் விட்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். யோகம் காட்டில் இல்லை; நம் மனக் கூட்டில் இருக்கின்றது.

அந்த வட இந்திய அன்பர் எனக்கு இரண்டாவது கடிதத்தை அனுப்புவதற்குள், நான் அவருடைய முதல் கடிதத்திற்குப் பதில் அனுப்ப முடியாததற்குத் தாமதம் அன்று காரணம். அவர் முதல் கடிதத்தில் தம்முடைய முகவரியைக் குறிப்பிடவில்லை.

இரண்டாவதாக வந்த கடிதத்தில் அதை அந்த அன்பரே குறிப்பிட்டிருந்தார். ‘இதற்கு முன்னால் நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி, அதற்கு பதில் எழுதுமாறும் கேட்டுக்

கொண்டிருந்தேன். கடிதத்தை அனுப்பியதற்குப் பிறகுதான் நான் என் முகவரியை எழுதாமல் மறந்து போனது ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே என் முகவரியோடு இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேன்.'

அதற்குப் பிறகு அந்தக் கடிதத்தில் ஒரு முக்கியமான செய்தியைக் கொடுத்திருந்தார். 'நான் உங்களுக்கு என் முதல் கடிதத்தைத் தபாலில் சேர்த்த பிறகு, அன்னையை வேண்டிக் கொண்டு அன்னைக்கு ஒரு காணிக்கையை அனுப்பி-யிருந்தேன். அதற்கான பலன் உடனே கிடைத்து விட்டது. நான் முதல் கடிதத்தில் முதல் பிரச்சனையாகக் குறிப்பிட்டிருந்த என் கணவரின் உத்தியோக உயர்வுப் பிரச்சனை தீர்ந்துவிட்டது. இதுவரை தடைப்பட்டு வந்த பதவி உயர்வு, அன்னையின் அருளால் என் கணவருக்குக் கிடைத்து விட்டது. இதற்கு எங்கள் நன்றியை அன்னைக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.'

அன்னைக்குக் காணிக்கை அனுப்பியவுடன் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த பதவி உயர்வு, தம் கணவருக்குக் கிடைத்து விட்டதாக அந்தப் பெண்மணி எழுதி இருந்தாரே, அது எப்படி அவ்வாறு நிகழ்ந்தது? இங்கே எல்லா அன்பர்களுமே கூர்ந்து நோக்க வேண்டும்.

நாம் அன்னைக்கு மனப்பூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் பிரார்த்தனை செய்து கொண்டாலும் கூட, அது சில சமயங்களில் பூரணமான பலனைக் கொடுக்காமல் இருந்து விடுகின்றது. அப்பொழுது நம் கோரிக்கை நிறைவேறாமல் தாமதப்படும். அதேசமயத்தில் நாம் அன்னைக்குக் காணிக்கை அனுப்பி வைத்துப் பிரார்த்தனை செய்து கொண்டால், நம்முடைய பிரார்த்தனை பூரணமாகி விடுகின்றது. அதனால் அதுவரை தாமதப்பட்டு வந்த பலன் நமக்கு உடனடியாகக் கிடைத்து விடுகின்றது.

'காணிக்கை அனுப்பினால்தான் பிரார்த்தனை பூரணம் அடையுமா?' என்று கேட்கத் தோன்றுகின்றதா? கேளுங்கள். கேட்டால்தான் விளக்கம் கிடைக்கும்.

நீங்கள் அப்படிக் கேட்பதாக நினைத்துக் கொண்டு, முடிந்த வரையில் ஒரு விளக்கத்தைத் தர முயல்கிறேன்.



இப்பொழுது விவசாயத்தையும், பக்தியையும் பொருத்திப் பார்க்கலாம்.

பயிர் செய்வதற்கு முதற்கட்டமாக நாம் என்ன செய்கின்-றோம்? நிலத்தை உழுது திருத்திச் சீர் செய்கின்றோம். நாம் மனப்பூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் செய்து கொள்ளும் பிரார்த்தனை, நிலத்தில் செய்கின்ற இந்தச் சீருக்குச் சமானம். இதுவரை உழைப்பு அல்லது ஈடுபாடு மட்டுமே முன் நிற்கின்றன. அதற்கு அடுத்த கட்டம் விதை போடுவது. 'விதை' என்பது ஒரு பொருள். இந்தப் பொருளீடு இல்லாமல் விளைச்சல் இல்லை. விளைச்சல் இல்லாததால் பலனும் இல்லை. அதைப் போலக் 'காணிக்கை' என்ற பொருளை, பிரார்த்தனையில் சேர்க்கும்பொழுது, அது விளைகின்றது. பலனைக் கொடுக்கின்றது.

அருள் உலகத்திற்கு இந்தக் கணக்கு இல்லை.

நாம் வாழ்கின்ற இந்த உலகம் பொருள் உலகம்; பொருளை ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்ற உலகம். பிறப்புக்கு ஒரு பொருள். கற்கும் கல்விக்கு ஒரு பொருள். இல்லற வாழ்வுக்கு ஒரு பொருள். சந்ததிக்கு ஒரு பொருள். வாழும் வாழ்க்கைக்கு ஒரு பொருள். சிறப்புக்கும் ஒரு பொருள். இவ்வாறு மனித வாழ்க்கையில்தான் எந்த ஒரு நிலையிலும் பொருள் பொதிந்-திருக்கின்றது. அதனால் மனிதன் பொருள் இல்லாத எதையும் பொருட்படுத்துவதில்லை; எதிலும் ஈடுபாடு கொள்வதும் இல்லை.

அத்தகைய சூழலில் வளர்ந்து விட்ட மனிதனை, 'நம்பிக்கை' என்ற வளையத்திற்குள் கொண்டு போய் நிறுத்தத்தான் 'காணிக்கை' என்பது பயன்படுத்தப்படுகின்றது.

மனிதர்களைத் தேடி வந்து 'எனக்குள் விதையுங்கள்' என்று நிலம் சொல்வதில்லை. அதைப்போலவே அன்னையும் 'எனக்குக் காணிக்கைக் கொடுங்கள்' என்று கேட்பதில்லை. நிலத்தில் விதைத்து விளைச்சலைக் கண்ட முதல் மனிதன் நமக்கு உதாரணம். அதைப் போலவே அன்னைக்குக்

காணிக்கையைச் சமர்ப்பித்துப் பலனை முழுவதுமாகக் கண்ட அன்னையின் முதல் அன்பர் ஒருவர் நமக்கு உதாரணம்.

காணிக்கை நம் கோரிக்கையைப் பூரணமாக்குகின்றது. அது முழுமையாகின்றபொழுது நம்முடைய பிரச்சனைகள் முற்றிலும் தீர்ந்து, நாம் எதிர்பார்த்ததற்கும் அதிகமான நன்மைகள் நமக்கு வரவாக வந்து சேர்கின்றன.

இனி அந்த வட இந்திய அன்பரின் விஷயத்திற்கு வருவோம். இரண்டாவது கடிதத்தின் மூலம் அவருடைய முகவரி கிடைத்து விட்டது. இனி அவருக்குப் பதில் எழுதத் தடையில்லை.

நான் அவருடைய இரு கடிதங்களுக்குமாகச் சேர்த்து, இவ்வாறு ஒரு பதில் எழுதினேன்: "கடன் இரண்டு விதங்களில் ஏற்படுகின்றது. ஒன்று, கையிருப்புப் பணத்தை விரையப்படுத்துவதனாலோ அல்லது தேவையற்ற வகையில் செலவு செய்வதனாலோ ஏற்படும் கடன். மற்றொன்று இருப்புப் பணத்தை ஒரு முதலீட்டில் போடுவதால் உண்டாகும் கடன். உங்களுடைய பிரச்சனை இரண்டாவது வகையைச் சேர்ந்தது. ஒரு சிறு தொகையை வைத்துக்கொண்டு பெரிய முதலீடுகள் செய்யும்பொழுது பிரச்சனைகளும் வரத்தான் செய்யும். அதைச் சமாளிக்க வேண்டுமானால், வருமானம் தேவையான அளவுக்குப் பெருக வேண்டும். ஆகவே, வருமானம் பெருக நீங்கள் அன்னையிடம் வேண்டி வந்தால், அன்னை நல்ல வாய்ப்புகளை உருவாக்கி, வருமானம் பெருக வழி செய்வார். உங்கள் கணவருக்குக் கிடைத்திருக்கும் உத்தியோக உயர்வே, உங்கள் வருமானம் பெருகுவதற்கு ஒரு வழியாக அமையலாம்."

2

தமிழ்நாட்டில் தென் பகுதியைச் சேர்ந்த ஓர் அன்பர், தமக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு நெருக்கடியைப்பற்றி எழுதியிருந்தார்.

"நான் சொந்தத்தில் ஒரு வீட்டு மனையை வாங்கிப் போட்டிருந்தேன். அதில் வீடு கட்ட முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினேன். முதலில் அன்னைக்கு ஒரு



காணிக்கையை அனுப்பினேன். பின்னர் ஒரு கொத்தனாரிடம் வீடு கட்டும் பொறுப்பை ஒப்படைத்து ரூபாய் ஐயாயிரத்தை அச்சாரமாகக் கொடுத்தேன். பணத்தை வாங்கிக் கொண்டு போனவர்தான். பிறகு கொத்தனார் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. கொத்தனாரைச் சந்தித்துக் கேட்டால், "வேலைதானே? அடுத்த வாரம் ஆரம்பித்து விடுவோம்" என்கின்றார். இப்படி எத்தனையோ அடுத்த வாரங்கள் ஓடிவிட்டன. ஆனால் வேலையை மட்டும் ஆரம்பித்தபாடாக இல்லை.

"அது மட்டுமன்று; பொதுவாக நான் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், இப்படித்தான் சிக்கலாகி விடுகின்றது. எவ்வளவு முயன்றாலும் பலன் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இந்த நிலை மாறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும், சால்ஜாப்புக் கூறி வரும் கொத்தனார் சட்டென்று வீட்டு வேலையைத் தொடங்குவதற்கும் ஒரு வழியைக் கூறும்படி வேண்டுகிறேன்."

அந்த அன்பரின் கடிதத்திற்கு நான் எழுதிய பதில் இது:

"பொதுவாக, நம் கடந்த காலச் செயல்களுக்கும், எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஏற்பத்தான் நம்முடைய நிகழ்காலச் சூழ்நிலைகள் உருவாகின்றன. இந்த நிகழ்காலச் சூழ்நிலைகளுக்கும், நம் கடந்த காலச் செயல்களுக்கும் உள்ள தொடர்பை நாம் கவனிப்பதில்லை. முயன்றால் இந்தத் தொடர்புகளை நாம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு அறிந்து கொண்டவுடனேயே பாதகமாக இருந்து வந்த சூழ்நிலை சாதகமாக மாறுவதை நிதர்சனமாகக் காணலாம். சில சமயங்களில் நம்மை நாமே செய்து கொண்ட விமர்சன அறிவு, புறச் சூழ்நிலையை ஓரளவு மாற்றினாலும், அது முழுமையான சாதகமாக மாறாமல் இருந்து கொண்டிருக்கும். அப்பொழுது நம் கடந்த கால வாழ்க்கையில் எந்தச் செயல் இப்பொழுதுள்ள பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணமாக உள்ளதோ, அந்தச் செயலை இப்பொழுது மாற்றிக் கொள்ள முன்வந்து, அதற்கு வகை செய்யும் அளவில் மனத்தையும் மாற்றிக்

கொண்டு விட்டால், சாதகமான சூழ்நிலை உருவாகும், பிரச்சனையும் மறைந்து போகும்.

கடந்த கால வாழ்க்கையை நினைவுக்குக் கொண்டு வருகின்றபொழுது மனத்தை நிதானமாகவும், உணர்ச்சிவசப்படாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தில் உங்களின் கடந்த கால வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை நெஞ்சால் தொகுத்து அவற்றைத் தினமும் அன்னையிடம் எடுத்துக் கூறி வந்தால், உங்களுடைய கொத்தனார் பிரச்சனை தீர்வதோடு, உங்களின் எதிர்கால வாழ்க்கையும் பல வகைகளில் சிறப்பாக அமையும்.”

நான் இந்தக் கடிதத்தை 1984-இல் டிசம்பர் மாதம் எழுதினேன். அதற்குச் சரியாக ஓராண்டு காலத்திற்குப் பிறகு அந்த அன்பரிடமிருந்து மீண்டும் ஒரு கடிதம் வந்தது. அவர் அதில், “நான் வீடு கட்டுவதைப்பற்றி உங்களுக்கு எழுதியிருந்தது நினைவிருக்கலாம். அன்னையின் அருளால் வீட்டைக் கட்டி முடித்து விட்டேன். வரும் 15-12-85 அன்று புதுமனை புக இருக்கின்றேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்” என்று எழுதியிருந்தார்.

சென்ற ஆண்டுவரை உருவாகாமல் போக்குக் காட்டிக் கொண்டு இருந்த வீடு, இப்பொழுது உருவாகி விட்டது. இந்த வீட்டை உருவாக்கியவை செங்கல்லோ, சிமெண்ட்டோ, அன்பருடைய பணமோ அல்ல. அவர் தம்மைத் தாமே ஒப்பு நோக்கிக் கொண்டதும் தம்மைத் திருத்திக் கொண்டதும்தாம் வீடு உருவாகக் காரணமாக இருந்த மூலங்கள். இதை அவர் சொல்லவில்லை. அதற்குக் காரணம் ‘சொல்ல வேண்டாம்’ என்பதாக இருக்க முடியாது. சொல்லத் தெரியாமல் போனதே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

பண்படுத்திய நிலத்தில் பயிர் விளைவதைப்போல அன்னையின் வழியில் மனத்தை நேர் செய்து கொண்டால், நினைவுகள் எல்லாம் நல் விளைவுகளாகும்.

❀❀❀



## பூலோகத்தைச் சொர்க்கமாக்கும் பூரணயோக இரகசியங்களை நிறைவேற்றும் நன்னாள் எந்நாள்?

கர்மயோகி

- நன்னாள் என்பது நல்லுணர்வு ஏற்படும் நாள்.
- 100 பேர்கள் சத்திய ஜீவியத்தை அடைந்தால், உலகம் சொர்க்கமாகும் என்றார் பகவான்.
- 12 யோகிகள் சத்திய ஜீவிய சித்தி பெற்றாலும் அது நடக்கலாம் என்றார்.
- மோட்சம் தனி மனிதனுடைய ஆத்மா விடுதலை பெறுவது.
- புத்தரும், விவேகானந்தரும் மோட்ச வாயிலில் நின்ற பொழுது, உலகில் ஒரு ஆத்மா இருளில் உள்ளவரை தமக்கு மோட்சம் வேண்டாம் என இருவரும் மறுத்தனர்.
- விவேகானந்தர் சமாதியடைந்தபின் தம் குறிக்கோள் பூர்த்தியடைய பகவான் ஸ்ரீ அரவிந்தரை ஜெயிலில் சந்தித்து, சத்திய ஜீவியத்தைக் காட்டினார்.
- இலக்கைக் காட்டியவர் பாதையைக் காட்டவில்லை.
- இலக்கைக் கண்ட மாத்திரம் பகவான் **(Supramental Vision)** ஜெயிலில் அனைவரையும், அனைத்தையும் நாராயணனாகக் கண்டார்.
- விஸ்வரூப தரிசனம் பெற்ற அர்ஜுனன் உலகின் அற்புதத்தையும், கோரத்தையும் கண்டான். பகவான் கண்டதில் அற்புதமிருந்தது. கோரமில்லை.
- காண்பது வேறு, அடைவது வேறு.
- மோட்சம் ஒருவன் ராஜா ஆவதுபோல். சத்திய ஜீவியம் அனைவருக்கும் ராஜாவாகும் உரிமை கிடைப்பதுபோல். அது மக்களாட்சியாகும். ராஜா பட்டத்திற்கு வந்தால்,

சாகும்வரை ஆள்வான். அதன்பின் அவன் மகன் ஆட்சிக்கு வருவான். மக்களாட்சியில் ஒருவர் ஜனாதிபதியானால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அடுத்தவர் வருவார். அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர், ஜனாதிபதி மகனாகாது.

- சத்திய ஜீவியத்தை அடையும் மார்க்கம் உலகுக்குப் புதியது. பகவான் பத்து ஆண்டுகளாக அதைத் தேடினார். அது மேல்-மனத்திலில்லை. அடிமனத்திலுள்ளது. அதையடைய தவம் உதவாது. சரணாகதி தேவை. ராஜா போய் மக்களாட்சி வர, ராஜ பீடத்தைப் பிடித்தால் போதாது. மக்கள் தங்கள் உரிமைகளை உணர வேண்டும். அதற்குப் பார்லிமெண்ட் போன்ற பல நூறு பேர்கள் கொண்ட சபை வேண்டும். நூறு பேர்களாவது தலைவர்கள் தேவை. 12 பேருக்குக் குறைந்தால் போதாது. அன்னையைத் தவிர பகவானுக்கு அடுத்தவர் கிடைக்கவில்லை. உடலை நீத்து, சூட்சும லோகம் போய் சக்தியைப் பூவுலகுக்குக் கொண்டு வந்தார்.
- 1956-இல் வந்துள்ள சத்திய ஜீவிய சக்தியை நம்மவர் நூறு பேர்கள், ஆயிரம் பேர்கள் பெற்றால், பூலோகம் சுவர்க்கமாகும்.
- அதற்கு ஆயிரம் யோகிகள் தேவை.
- யோகத்தை நாடுபவருக்கு ஆதாய மனப்பான்மை கூடாது.
- யோகத்தை ஏற்று எவரும் வராவிட்டால், கோடீஸ்வரனாக, இலட்சாதிபதியாக ஆயிரமாயிரம் பேர் வரலாம்.
- அப்பணம் நேர்மையாகச் சம்பாதிக்கப்பட்டால் அது முதற்படி.
- அதன் வழி உலகம் யோகத்தை நாடலாம்.
- நூறு பேர்கள், ஆயிரம் பேர்கள் தேட வழி இல்லாவிட்டால் நாம் - ஒருவர் - கோடீஸ்வரனாக முன்வரலாம்.
- கோடீஸ்வரனாக, நேர்மையாக வருவது பூலோகத்திற்கு யோகம்.
- சம்பளத்திற்கு வேலை செய்பவருக்கு அது இல்லை.
- வேலையை விட்டு தொழிலை நாடுபவருக்கு அது உண்டு.



- தொழிலில், லஞ்சம் தராமல், பொய் கணக்கு எழுதாமல், ஏமாற்றாமல் ஏராளமாகச் சம்பாதிப்பது யோகம்.
- சம்பளக்காரனுக்குக் கோடியில்லை.
- ஆனால், வேலையை அதிகபட்சம் சிறப்பாகச் செய்தால், சமர்ப்பணத்தால் அதைச் செய்தால், வேலைபோய் தொழில் வரும்.
- குடும்பத்துப் பெண்களுக்கு வழியில்லையா?
- செய்யும் வேலைகளைச் சமர்ப்பணத்தால் உண்மையாகச் செய்பவர் எதைச் செய்தாலும் யோகியாவார்.
- அப்படிச் செய்வதற்கு அடையாளம் எது?
- அனைவரிடமும் நல்ல பெயரெடுப்பது ஒரு அடையாளம்.
- அடக்கம் சிறந்த அடையாளம்.
- **Perfect Work** சிறப்பான வேலை நல்ல அடையாளம்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிருஷ்டிக்கப்படாத பிரம்மம், சிருஷ்டிப்பதில்லை. மனம் அறிவால் வளர்வதில்லை, எடுத்தால் குறைவதில்லை. பிரம்மம் மனம் போலும், ஆகாயம் போலும் உள்ளது.

The infinitesimal is the frontal part of the Infinite.

அணுவும் அனந்தமும் ஒளியும் நெருப்பும் போலும். அகண்டமும் கண்டமும் ஆணும் பெண்ணுமாம். ஜெராக்ஸ் பிரதி எடுத்தால் குறையாது. சிருஷ்டியால் பிரம்மம் குறையாது. உள்ளும் புறமும் உள்ள பிரம்மம் ஒன்றே என்பது அற்புதம்.

## அன்பர் அனுபவம்

மகேஷ் குமார், கும்பகோணம்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவர்களுக்கும், பராசக்தி அவதாரமான ஸ்ரீ அன்னை அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்கள்.

என் பெயர் மகேஷ் குமார், நாங்கள் கும்பகோணத்தில் வசித்து வருகிறோம். எங்களுக்குக் கிடைத்த அன்னையின் அனுபவத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டி இக்கடிதத்தைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு என் அம்மா வேலை செய்யும் வீட்டிற்கு, லண்டனிலிருந்து ஓர் வயதான பெண்மணி வந்திருந்தார். அவருடன் அவருடைய குடும்பத்தினரும் வந்து இருந்தனர். அந்த வயதான பெண்மணியின் பெயர் கிரிஜாம்பாள். அவர் என் அம்மா வேலை செய்து கொண்டிருக்கும்போது, அம்மாவின் கழுத்திலிருந்த அன்னை டாலரைப் பார்த்து, 'நீங்கள் அன்னையை வணங்குபவரா?' என்று கேட்டார். அதற்கு என் அம்மாவும் 'ஆமாம்' என்று சொன்னார்கள். பிறகு என் அம்மா ஸ்ரீ நகர் காலனியிலுள்ள அன்னை தியான மையத்தில் சேவை செய்வதாகச் சொன்னார்கள். அதைக் கேட்ட அந்தப் பெண்மணி மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். பிறகு அந்தப் பெண்மணி ஒரு விஷயமும் கூறினார்கள்;

1960-ஆம் ஆண்டு அவர் அன்னையை நேரடியாக தரிசித்த-தாகவும், அப்போது அன்னை கும்பகோணத்தைப்பற்றி சில விஷயங்கள் கூறியதாகவும் சொன்னார்கள்.

அன்னை அவரிடம் கூறிய செய்தியாக அந்தப் பெண்மணி கூறியது, “1960-ஆம் ஆண்டு நான் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பத்தாம் வகுப்பு முடியும் சமயம். அந்தக் காலத்தில் பத்தாம் வகுப்புக்குமேல் படிக்க வைப்பது என்பது அரிது. எனது படிப்பு முடிந்தவுடன் எனக்குத் திருமண ஏற்பாடு நடந்தது. அப்போது பலதரபட்ட மாப்பிள்ளைகள் என்னை வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். ஆனால் எந்த வரனும் எனக்குச் சரியாக அமையவில்லை.



இதனால் எனது பெற்றோர்கள் மிகவும் வருத்தமடைந்தனர். இதைக்கண்ட என் அம்மாவின் தோழி அன்னையைப்பற்றிக் கூறினார். இதைக்கேட்ட என் பெற்றோர்கள் அன்னைக்குக் கடிதம் எழுதினார்கள். அதில் எங்களுடைய பிரச்சனையையும் சேர்த்து எழுதினார்கள்.

மூன்று மாதங்கள் கழித்து, அன்னையிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு தேதியும் குறிப்பிட்டிருந்தது. இப்பொழுது எனக்குத் தேதியும் நினைவிலில்லை. அன்னையைத் தரிசனம் செய்யவரும்படி அதில் எழுதப்பட்டிருந்தது. அப்பொழுது எங்கள் வீடு கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குளத்தின் அருகே இருந்தது. பிறகு நாங்கள் அன்னையைத் தரிசிக்க அவர் கொடுத்த தேதியில் புதுவைக்குச் சென்றோம். அன்னையைத் தரிசனம் செய்யும் வரிசையில் நாங்கள் கடைசி நபராக இருந்தோம். வரிசைப்படி நாங்களும் அன்னையைத் தரிசிக்க அன்னையின் அறையினுள் நுழையும் நேரம் வந்தது. நாங்கள் உள்ளே சென்று அன்னையைத் தரிசித்தோம். அப்போது, அன்னை வெள்ளை புடவை உடுத்தி, ராஜபோகத்தோடு, ஜகஜ்ஜோதியாக அமர்ந்திருந்தார். அவருடைய வெள்ளைப் புடவையில் அழகாக தாமரைப்பூ வேலைப்பாடுகள் செய்யப்-பட்டிருந்தன. இப்போது நம் அனைவர் கவனத்தையும் ஈர்க்கும் **Lotus** மதர் படம்போல் இருந்தார். அந்த நேரத்தில் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை நானும், எனது பெற்றோரும் தரிசித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது அன்னை எங்களை உற்று நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் எனது பெற்றோர் இவர்தாம் அன்னை. இவரது காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கொள் என்று கூறினர்.

அப்பொழுது நான் அன்னையின் காலைத் தொட்டு வணங்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றேன். பிறகு, நான் எழுந்தவுடன், அன்னை என் பெயரைக் கேட்டார். நான் உடனே என் பெயர் கிரிஜாம்பாள் என்று கூறினேன். பின் அன்னை என்னைப் பார்த்து நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்துக் கொண்டிருந்தேன். ஏனெனில் அன்னை பிரெஞ்சு மொழியில் பேசினார்கள். உடனே அன்னை

எங்களுக்கு பாஷை புரியவில்லை என்பதை உணர்ந்து, அவர் அருகில் இருந்த ஒரு பெண் சாதகியை அழைத்து மொழி-பெயர்த்துச் சொல்லச் சொன்னார். அந்தச் சாதகியும் மொழி-பெயர்த்து எங்களிடம் கூறினார்.

அப்பொழுது நாங்கள் கும்பகோணத்திலிருந்து வருகிறோம் என்று கூறினோம். அதை அந்தச் சாதகி அன்னையிடம் மொழி-பெயர்த்துக் கூறினார். இதைக்கேட்ட அன்னை 'கும்பகோணம் ஆன்மீகத்திற்குத் தலைசிறந்த ஊராயிற்றே' என்று கூறினார். நாங்களும் 'ஆமாம்' என்று கூறினோம். மேலும் அன்னை கூறினார், 'வருங்காலத்தில் கும்பகோணத்தில் என்னுடைய ஆன்மீகமும் தலை சிறந்து விளங்கும்' என்றார். இதை அந்தச் சாதகி மொழி-பெயர்த்து எங்களுக்குக் கூறினார். பிறகு அன்னையிடம் மலர்ப் பிரசாதங்களையும், இனிப்புகளையும் பெற்றோம். அதன்பின் எங்கள் ஊருக்கு வந்துவிட்டோம். பின்னர் சில மாதங்கள் கழித்து, என் திருமணம் அன்னையின் ஆசீர்வாதத்தால் சிறப்பாக நடந்தது. என் வாழ்க்கையும், மிகவும் சந்தோஷமாகவும், வளம் நிறைந்த-தாகவும் அமைந்துள்ளது". இவ்வாறு அந்த வயதான பெண்மணி கூறினார்கள்.

அந்த வயதான பெண்மணி எங்களிடம் கூறிய கடைசி வார்த்தை, 'எது பொய், எது உண்மை என்று ஆராய்ச்சி செய்வதைவிட உண்மையின் வடிவமாக அன்னை இருக்கும் பொழுது, அந்த உண்மையின் பாதையில் செல்வது, உண்மையான வாழ்க்கை ஆகும். இதுவே தெய்வீக வாழ்க்கை ஆகும். இதை விட்டுவிட்டு எது உண்மை, எது பொய் என்று ஆராய்ச்சி செய்பவன், அஞ்ஞானி ஆவான்.

மேலும் கும்பகோணத்தில் அன்னை தியானமையம் இருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அங்குத் தியானம், சொற்பொழிவு மற்றும் புத்தக வாசிப்பு என்று எல்லாம் சிறப்பாக நடப்பது, அன்னை கூறியபடியே அவருடைய ஆன்மீகமும் தலைசிறந்து விளங்குவதற்கு சாலச்-சிறந்ததாக உள்ளது. அன்று, 1960-ஆம் ஆண்டு அன்னை கூறிய வார்த்தை இன்று உண்மையானது'.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 97. இலட்சியம் என ஒன்றில்லை.

- இலட்சியம் அனைவருக்கும் உண்டு. நல்லவருக்குரிய இலட்சியம் நல்லது.
  உயர்ந்தவர்க்குரிய இலட்சியம் உயர்ந்தது.
- பெயிலான பையன் தற்கொலை செய்து கொள்கிறான்.
  முதல் மார்க் தவறியதால் தற்கொலை செய்தவரும் ஒரிருவர் உண்டு.
- ஒருவர் இலட்சியம் பாஸ் செய்வது, அடுத்தவர் இலட்சியம் முதல் மார்க்.
- தவறு செய்ய எவரும் பிரியப்படுவதில்லை, அப்படித் தவறு செய்பவர்கள் மாட்டிக் கொள்ளப் பிரியப்பட மாட்டார்கள். அதனால் மீண்டும் தவறு செய்யாமலிருக்க மாட்டார்கள்.
  ஷேக்ஸ்பியர் அம்மனநிலையை வர்ணிக்கிறார்.
  இலட்சியம் தவறு செய்யாததில்லை, மாட்டிக் கொள்ளாதது.
- எந்தக் கோயிலிலும் செய்யும் நூறு பிரார்த்தனைகளில் தொண்ணூற்றுக்கு மேற்பட்டது என்னைக் காப்பாற்று என்று தவறு செய்தவன் செய்யும் பிரார்த்தனை.
- பிரார்த்தனை செய்யாதவனுக்குச் சமர்ப்பணம் உண்டு. சமர்ப்பணம் செய்யாதவனுக்கு என்ன உண்டு. அவனுக்கு இலட்சியமுண்டா?
  இலட்சியம் கூடாது என்பது இலட்சியமா?
  கூடாது எனில் மறுப்பால் தொடர்பு ஏற்படுகிறது.
  ஏற்பாலும் மறுப்பாலும் தொடர்பில்லாதது, இலட்சியம் மனதில் இல்லை என்றாகும்.
- இலட்சியத்தை ஏற்பவன் உயர்ந்தவன்.
- ஏற்றதைப் பூர்த்தி செய்பவன் சிறந்தவன்.

- இலட்சியத்தை மறுப்பவன், இலட்சியத்தைவிட உயர்ந்தவன்.
- இலட்சியம் மனதில் இல்லாத நிலை, மனித நிலையைக் கடந்த நிலை.
- அது ஒருவர் மனநிலையானால், அவருக்குப் பூரண யோக வாயில் திறக்கும்.
- இந்தத் தொகுதியில் பெரும்பாலானோர் ஆதரவு ஒருவருக்கு உண்டானால், அவருக்குத் தேர்தலில் ஜெயம் உண்டு.
- கட்சிக்குப் பலன் கருதாத முறையில் ஒருவர் உழைத்தால், அவருக்குத் தலைமைக்குரிய தகுதியுண்டு.
- நேரு, மகளுக்கு **M.P.** பதவியும் தர மறுத்தால், அவர் பெண் அவர் ஆண்ட அளவுக்கு ஆளும் தகுதி பெறுகிறார்.
- ஆங்கிலம் சரளமாக எழுத வருமானால், எந்தப் பரீட்சையும் பாஸ் செய்யும் வாய்ப்புண்டு.
- பெண் பொறுப்பானவளானால், குடும்பம் திவாலாக முடியாது.
- பொய் சொல்ல முடியாதவருக்கு, வாழ்வில் உயர்வு எந்த நிலையிலும் தடையாகாது.
- பெரியதான இலட்சியமும் ஒருவருக்குப் பொருட்டாகா-விட்டால், அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.

**ஜீவிய மணி**

**வாழ்வு வேகமாகவும், உந்தலுமாகவுமுள்ளது.**
**வேகத்தை மறுத்தாலும், உந்தல் இருக்கும்.**
**உந்தலையும் மறுப்பவர்**
**பெறுவது ஜீவனின் மௌனம்.**
**மறுப்பது முதல் நிலை.**



## அஜெண்டா

**ஆத்மாவின் அந்தரங்கக் குரலாக ஒலிக்கும் மந்திரத்தை எந்தக் குருவாலும் கொடுக்க முடியாது.**

Volume 4, page 139

- எந்த யோகமும் ஒரு குரு மூலம் செய்ய வேண்டும்.
- குரு இல்லாமல் யோகம் செய்வது நாலு வயதுக் குழந்தை ரோட்டில் நடப்பது போலாகும்.
- யோகம், தவம் ஆபத்து நிறைந்த பாதை.
- குருவின் கீழ் செய்யும் யோகத்திலும், எல்லா ஆபத்திலிருந்தும் தப்பிக்க முடியாது.
- பெரும்பாலும் வழிதவறி, சித்தஸ்வாதீனமிழந்து விடுவார்கள்.
- மூச்சு, ஜீரணம் சம்பந்தமான தீர்க்க முடியாத வியாதிகள் வரும்.
- நஷ்டம் வராத தொழிலில்லை.
- இலாபம் வேண்டுமானால், நஷ்டமும் வரும்.
- யோகம் எளிய மனிதனுக்கில்லை.
- **Ph.D.** பட்டம், பாரத ரத்னம், முதலமைச்சர் பதவி எல்லோருக்கு-மில்லை.
- பெரு வெற்றிகள் குறைந்தபட்சமானவர்க்கேயுண்டு.
- மந்திரம் என்பது வாழ்நாள் முழுவதும் செய்த யோகப் பலன்.
- ஒருவர் பெற்ற நோபல் பரிசு, பாரத ரத்னம் அவரால் பிறருக்குக் கொடுக்க முடியாது.
- தான் பெற்றதைப் பிறர் பெறும் வழி செய்வதும் எளிதல்ல.
- ஒரு ரிஷி எழுதிய மந்திரத்தை நாம் உச்சரிப்பதால் அதன் பலன் பெறுகிறோம்.
- பாம்புக் கடியிலிருந்து தொலைந்த பொருளைக் கண்டு பிடிக்கும்வரை உள்ள மந்திரங்கள் ஏராளம்.

- இங்கு யோக சம்பந்தமான மந்திரத்தை மட்டும் குறிக்கிறார் அன்னை.
- மந்திரம் என்பது ஆத்மா விழித்து ஆண்டவனை நோக்கி எழுப்பும் ஆர்வக் குரல்.
- அக்குரல் அவருக்கு மோட்சம் தரும்.
- ஒரு குரு தரும் மந்திரம் அது போலிராது.
- அந்த ஆர்வத்தை எழுப்ப அது உதவும்.
- எழுந்த ஆர்வம் சொந்தமான மந்திரத்தை ஆழத்திலிருந்து எழுப்ப வேண்டும்.
- ஒருவர் வலியைப் பிறர் ஏற்க முடியாது.
- ஒருவருக்குத் தேவையான மந்திரத்தை அவரே அவருள் தேடிப் பெற வேண்டும்.
- தீக்குளிப்பவர் மன நிலையது.
- உடலும், உயிரும் மந்திரமயமானால் தீ சுடாது.
- மந்திரம் ஜீவனுடைய குரல்.
- வாழ்வே பூரண யோகத்தில் மந்திரமாக வேண்டும்.

### ஜீவிய மணி

சரணாகதி நோக்கமானால், எண்ணம் மௌனத்தின் வாயில்.

அதுவே ஜீவனின் இலட்சியமாவது உடலும் ஜீவனும் புளகாங்கிதம் தரும். அன்னை ஜீவியம் நம் ஜீவியமாவது சரணாகதியின் பூரணம்.

ஆன்மாவும், சுபாவமும் சரணாகதியை ஏற்றால் சரணாகதிக்கு வேலையில்லை.



## உதவி

கர்மயோகி

உதவி செய்வது உள்ளம் உயர்வது.

உத்தமனுக்குக் கேட்காமல் செய்வது உதவி.

கேட்காமல் அதமனுக்குச் செய்யும் உதவி அர்த்தநாசம்.

கயவன் கேட்டாலும் உதவக் கூடாது - உதவி உபத்திரவம்.

உதவத் தோன்றுவது உத்தமம்.

மட்டமானவனுக்கு உதவத் தோன்றுவது அழிவுக் காலம்.

தனக்கு உதவுவதால், பிறர் உயர்வதை அறிந்து பொறாமைப்படுவான் கயவன்.

கயவன் கண்ணில்படாமலிருக்க உள்ளே கயமையிருக்கக் கூடாது.

கயவன் தரும் ஞானம் முடிவான கடைசி ஞானம்.

பொதுத்தொண்டு கயவன் பொறியில் மாட்டுவது.

கற்பழிக்க விரும்புபவனைக் காதலிப்பது போன்றது பொதுத் தொண்டு.

பொதுத்தொண்டு பொதுவாக மட்டுமிருக்க வேண்டும்.

பொதுத்தொண்டைக் குறிப்பிட்டவர்க்குச் செய்வது தன்னையும், தொண்டையும் அழித்துக் கொண்டு கெட்ட பெயர் வாங்குவது. உயர்வின் உச்சியிலிருந்து கயவனை முழுவதும் அறிந்து விலகும் பெரிய மனிதனுக்குப் பொதுத்தொண்டு பொருந்தும். சிறிய மனிதன் பொதுத்தொண்டில் துண்டாடப்படுவான். அறியாதவனுக்கு அவன் அறியாத நல்லதை அளிக்க முயல்வது அறியாமை.

நல்லவன் வல்லவனாக இருப்பதவசியம். அது மட்டுமல்ல. பிறரை நேரம் வரும் பொழுது அழிக்கத் தயாராகாவிட்டால் அழிக்கப்படுவான்.

மனிதனிலிருந்து விலகுவது மனிதத்தனம்.

★★★

## சாதனைக்கு உதவும் விஷயங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

என். அசோகன்

உழைப்பதில் ஆர்வம் இல்லாத ஒருவருக்கு எவ்வளவுதான் பணம் செலவழித்து ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொடுத்தாலும் அவர் உழைக்க முன்வராதபட்சத்தில் அந்த வேலை கெட்டுத்தான் போகும். அம்மாதிரியே வேலையாட்களைக் கட்டுப்படுத்தத் தெரியாவிட்டால் அவரவர் சம்பளத்தை அதிகரித்துக் கொண்டு நிறுவனத்தில் லாபமே இல்லாத மாதிரி செய்து விடுவார்கள். நெருக்கடிகள் வந்தால் சோர்ந்து போகக் கூடியவர்கள், பத்து நாட்கள் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றவுடன் அதற்குப் பயந்து போய் அதனாலேயே தொழிற்சாலையை மூடுகிறார்கள் என்றால் அப்படிப்பட்டவர்கள் எப்படி ஒரு பெரிய வேலையைச் சாதிக்க முடியும்? ஆகவே எந்த ஒரு பெரிய வேலையை அவர்களிடம் கொடுக்கும் முன்னர் வேலைக்கேற்ற மனப்பான்மை இவர்களிடம் இருக்குமா என்று தெரிந்த பின்னரே அவர்களிடம் அந்த வேலையைக் கொடுக்க வேண்டும். இதுவரையிலும் காரியப் பூர்த்திக்குத் தேவையானவைகளைப்பற்றி பொதுப்படையாகக் கூறினேன். இப்போது குறிப்பாகக் காரியப் பூர்த்திக்கு உதவக் கூடிய விஷயங்களைப்பற்றிச் சொல்ல வருகிறேன்.

**1. கடின உழைப்பு:** கடின உழைப்பு சாதிப்பதற்கு மிகவும் அவசியமாகிறது. காமன் சென்ஸிற்குக்கூட இது மிகவும் தெளிவாகத் தெரியும். ஏன் கடின உழைப்பு அவசியம் என்று யாருக்கும் கேட்கத் தோன்றுவதில்லை. நாம் இருப்பது பிஸிக்கல் பிளேன் என்பதால் அந்தப் பிளேனில் பலன் காண வேண்டும் என்றால் நாம் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. பிஸிக்கல் பிளேனை அசைப்பதும் கடினம். மேலும் பலனும் தாமதமாகவே கொடுக்கும். விவசாயம், வியாபாரம், அரசியல், கலை, விஞ்ஞானம் என்று எந்தத் துறையாக இருந்தாலும்



அடிப்படை வேலை பிஸிக்கலாக இருப்பதால் கடினமான உழைப்பு அவசியமாகிறது. நிலத்தைப் பயிர் செய்வது, தொழிற்சாலையை நிர்வகிப்பது, தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது என்று எதை எடுத்துக் கொண்டாலும் கடின உழைப்புத் தேவைப்படுகின்றது. அமெரிக்கக் கண்டு பிடிப்பாளர் எடிசன் அவர்கள் கிரியேடிவிடி என்பது 99% உழைப்பும், 1%-தான் உள்ளெழுச்சியும் (inspiration) அடங்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். பரிணாமக் கொள்கையைக் கண்டுபிடித்த சார்லஸ் டார்வின் அவர்கள் அதை நிரூபிப்பதற்காக ஆதாரங்களைத் தேடி தென்அமெரிக்கா வரையிலும் இரண்டுமுறை பயணம் செய்ய வேண்டியிருந்தது. அவர் செய்தது பெரிய கண்டுபிடிப்பு என்றாலும், அதை நிரூபிப்பதற்காகப் பல ஆயிரம் மைல்கள் தூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே சாதிப்பதற்குக் கடின உழைப்பு அவசியமா என்பதுபற்றி யாருக்கும் சந்தேகம் தேவையில்லை.

எல்லோருக்கும் புரியாமல் இருக்கும் விஷயம் என்னவென்றால் ஒரு சில பேர் கடினமாக உழைக்குபோது இன்னும் சில பேர் வேலை செய்வதில் ஏன் ஆர்வம் காட்டாமல் இருக்கிறார்கள் என்பதுதான். நிகழ்ச்சி பிஸிக்கலாக இருப்பதால், காரணமும் பிஸிக்கலாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சாதிக்க வேண்டுமென்று மனதில் உற்சாகம் நிறைந்தவர்கள் அதன் காரணமாக உடலிற்கும் எனர்ஜியை வழங்கி வேலை செய்து விடுகிறார்கள். அதேசமயத்தில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாதவர்களுக்கு உணர்வு மையத்தில் உற்சாகம் குறைகிறது. அங்கே உற்சாகம் குறைவதால் உடம்பிற்கும் எனர்ஜி கிடைக்காமல் போகிறது. இதனால் இவர்களுக்கு வேலை செய்ய முடியாமல் போகிறது.

ஆகவே கடின உழைப்பு என்பது பிஸிக்கல் திறமையே இல்லை. மாறாக அது உணர்வு மையம் சம்பந்தப்பட்ட ஒரு திறமையாகும். உண்மையைச் சொன்னால் உணவின் மூலம் உடலுக்குக் கிடைக்கும் எனர்ஜியைவிட உணர்வு மையத்தின் மூலமே உடலுக்கு அதிக எனர்ஜி கிடைக்கும். பெரும்பாலும்

மனிதர்களுக்கு வேலை செய்யப் பிடிப்பதில்லை. ஆகவே பெரும்பாலானவர்கள் 9 to 5 கால வரையறையையே விரும்பு-கிறார்கள். இம்மாதிரி வேலை செய்யும் நேரத்தைக் குறைப்பது நமக்குச் சுகமாக இருக்கலாம். ஆனால் பலனும் அந்த அளவிற்கு அளவாகத்தான் இருக்கும். அன்னை கடுமையான உழைப்பாளி என்று பெயர் வாங்கியவர். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம்தான் தூங்கினார். பகவான் தனக்கு வரும் அன்பர் கடிதங்களுக்குப் பதில் அளிப்பதற்காக தினமும் இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்கூட கண் விழித்து பதில் எழுதுவார். அன்னை ஆசிரமவாசிகளுக்கு உங்களால் அதிக-பட்சம் முடிந்ததைச் செய்யுங்கள். சிரமமாக இருந்தாலும் பரவாயில்லை என்று அறிவுறுத்தினார்.

லட்ச ரூபாய்க்குமேல் நாம் சம்பாதிக்கலாம் என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சொல்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்பவர்கள் இப்படி 9 to 5 என்று அளவோடு வேலை செய்தால் இது சாத்தியமாகாது. வேலை முதல்பட்சம், மற்றது எல்லாம் இரண்டாம்பட்சம் என்ற மனநிலை இருந்தால்தான் இது சாத்தியமாகும். வேலையே குறியாக இருக்கின்ற அன்பர்களும் இருக்கிறார்கள். அவர்களால் தரிசன நாட்களில்கூட தியான மையத்திற்கு வர முடிவதில்லை. ஆனால் வேலைதான் முக்கியம் என்று அன்னை சொல்வதை வைத்துப் பார்க்கும் பொழுது தரிசன நாட்களிலும் தியான மையத்திற்கு வராமல் அவர்கள் வேலை செய்வது சரி என்றுதான்படுகிறது. அவர்கள் பணி இடத்தில் இருந்தாலும், தியான மையத்திலிருந்தாலும் அன்னையின் அருள் அவர்களுடன் இருக்கும் என்று தெரிகிறது.

2. **அறிவு மற்றும் திறமை:** மனிதனை விலங்குகளிலிருந்து பிரிப்பது அவனுக்குள்ள அறிவும் திறமையுமே ஆகும். ஆகவே, அவனுடைய கடின உழைப்பு அறிவுமயமான உழைப்பாக இருந்தால்தான் அதற்குரிய முழுப்பலனும் கிடைக்கும். அறிவு இல்லாத கடின உழைப்பு குறைந்தபட்ச பலனையே கொடுக்கும். அறிவில்லாமல் கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் கடும் வெய்யிலில் பத்து அல்லது பதினைந்து



மணி நேரம்கூட வேலை செய்யலாம். ஆனால் அத்தகைய கடின உழைப்புக்கூட ஒரு நாளைக்கு நானூறு அல்லது ஐநூறுதான் சம்பாத்தியம் கொடுக்கிறது. ஆனால் திறமைசாலி-யான டாக்டர்கள், வக்கீல்கள், தொழில் நிபுணர்கள் போன்றவர்-களுடைய கடின உழைப்புப் பல மடங்கு அதிக வருமானத்தைப் பெற்றுத் தருகிறது. ஏனென்றால் இங்கு அறிவின் ஈடுபாடு அதிகம். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் மிகவும் வளமாக இருப்பதற்குக் காரணமே நம் நாட்டவரைவிட அந்நாட்டவர் அதிகம் படித்தவராகவும், அதிகம் திறமை உள்ளவராகவும் இருக்கிறார்கள் என்பதுதான். இரண்டாம் உலகப்போர் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளைப் பொருளா-தார ரீதியாக மிகவும் சேதப்படுத்தியது. இருந்தாலும், இந்த நாடுகள் அடுத்த பத்து வருடங்களில் தங்கள் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. இதற்குக் காரணம் அவர்களிடம் இருந்த படிப்பும், திறமையுமே ஆகும். வெடிகுண்டுகள் தொழிற்சாலை, சாலைகள், கட்டடங்கள் என்றிவற்றையெல்லாம் சேதப்படுத்தின. ஆனால் மக்களுடைய அறிவு மற்றும் திறமைகளை இந்த வெடி-குண்டுகளால் அழிக்க முடிவதில்லை. அந்நாட்டு மக்களுக்கு வேண்டியது ஒரு பெரிய முதலீடாக இருந்தது. அந்த முதலீட்டை அமெரிக்க அரசாங்கம் வழங்கியபோது, அதை அவர்களுடைய திறமையுடன் இணைத்து மீண்டும் பழைய சுபிட்சத்தைக் கொண்டு வந்து விட்டனர். ஆனால் அதே அளவு போர் சேதம் இந்தியாவில் நிகழ்ந்துள்ளதாக நாம் வைத்துக் கொண்டால், அதே அளவிற்கு உதவியை அமெரிக்கா செய்திருந்தாலும் நம் நாடு அவ்வளவு வேகமாகப் பொருளா-தாரத்தைச் சீர்படுத்தி இருக்காது. ஏனென்றால் அந்த அளவிற்கு நமக்குத் திறமை குறைவு.

அமெரிக்காவிற்கு இணையாக நம் நாடு அடுத்த இருபது வருடங்களில் வர வேண்டும் என்று நிறைய பேர்கள் பிரியப்-படுகிறார்கள். ஆனால் அமெரிக்கர்களைப்போல படிப்பறிவை-யும், திறமையையும் நாம் வளர்த்துக் கொண்டால்தான் இது சாத்தியமாகும். கூடுதல் முதலீடு மற்றும் நவீன டெக்னாலஜி

மட்டும் கொண்டு வந்தால் போதாது. இவற்றைப் பயன்படுத்த மக்களுக்குத் தேவையான திறமை வேண்டும். ஓர் அன்பர் அறிவோடும் திறமையோடும் செயல்படும் போது அவருக்குக் கிடைக்கும் அருள் அவர் செய்கின்ற வேலைக்குப் பல மடங்கு பலனைக் கொடுக்கிறது. இதற்குக் காரணம் அவர் வேலையை நேர்த்தியாகச் செய்கின்றார் என்பதுதான். அதேசமயத்தில் அறிவில்லாமல் கடினமாக உழைக்கும் அன்பர்களுக்குக் கிடைக்கின்ற அருள், இவர்கள் அறிவில்லாமல் செய்யும் வேலையில் ஏற்படும் பிழைகளைச் சரி செய்யவே செலவாகி விடுவதால், ஒட்டு மொத்தப் பலன் சுமாராகவே இருக்கிறது.

3. **ரிஸ்க் எடுப்பது:** சாதிக்க விரும்புகின்றவர்களுக்கு ரிஸ்க் எடுக்கக்கூடிய துணிச்சலும் வேண்டும். வாழ்க்கை நிலையானது இல்லை. மேலும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சொல்லவும் முடியாது. அதனால் நாம் ரிஸ்க் எடுத்தே ஆக வேண்டியுள்ளது. மனிதன் வாழ்க்கையை எந்தளவிற்குப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியுமோ அந்தளவிற்குப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள பிரியப்படுகிறான். ஆனால் குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள்தான் இது முடியும். அந்த வட்டத்தைத் தாண்டி வெளியே வந்தால் வாழ்க்கை மிகவும் பெரியதாக இருக்கிறது. மார்க்கெட் சூழ்நிலைகள், கவர்மெண்ட் பாலிசி, வானிலை, லேபர் மார்க்கெட், மற்ற வியாபாரிகள் வழங்கும் போட்டி என்று எதுவுமே நம் கட்டுப்பாட்டில் இல்லை. அப்படி வெளி வாழ்க்கை பெரும்பாலும் நம் கட்டுப்பாட்டில் இல்லாத சூழ்நிலையில் நாம் விரும்பியதைச் சாதிக்க வேண்டும் என்றால் நாம் ரிஸ்க் எடுத்துச் செயல்பட்டே ஆக வேண்டியதாக உள்ளது.

இப்போதெல்லாம் விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு இருக்கிறது. ஆகவே அவர்கள் நட்டம் வந்தாலும் காப்பீட்டு நிவாரணம் கிடைக்கிறது என்று நம்பி பயிர் செய்யலாம். இருபது வருடங்களுக்கு முன்னால் இத்தகைய இன்சூரன்ஸ் பாதுகாப்புகள் எல்லாம் கிடையாது. பூச்சிகள் தாக்குதல் இல்லாமல், புயல் மற்றும் வறட்சி தாக்குதல் இல்லாமல் நல்லபடியாக பயிர் வளர



வேண்டும் என்று நம்பிதான் விவசாயம் செய்ய வேண்டும். பதவி மற்றும் அதிகாரத்தை விரும்புகின்றவர்களுக்கு அரசியலில் நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தேர்தலைச் சந்திப்பவர்களுக்கு தோல்வியை சந்திக்கும் அபாயமும் இருக்கிறது. அரசாங்கப் பணியில் இருப்பவர்கள் தேர்தலில் நிற்க விரும்பினால் அந்தப் பணியை ராஜினாமா செய்ய வேண்டும். அதற்குத் துணிந்தவர்களால்தான் அரசியலில் எதுவும் சாதிக்க முடியும். அப்படிப் பார்த்தால் எல்லா துறைகளிலுமே ஏதோ ஓர் ஆபத்து இருக்கத்தான் செய்கிறது. ஆபத்து இல்லாதத் துறையே இல்லை என்றுகூடச் சொல்லலாம். மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால்கூட கவனக்குறைவாக சிகிச்சை அளித்ததால்தான் நோயாளிகள் பாதிப்புக்குள்ளானார்கள் என்று கன்ஸ்யூமர் கோர்ட்டில் வழக்குத் தொடர்கிறார்கள். தொடர்ந்து இரண்டு படம் தோல்வியடைந்தால், அதன் பிறகு திரைப்படத்துறையில் புது கதாநாயகர்கள், கதாநாயகிகள் முன்னுக்கு வருவதே அரிது. ஜூனியர் வழக்கறிஞர்கள் சீனியர் வழக்கறிஞர்களிடம் நெடுநாளைக்குப் பயிற்சி எடுக்க வேண்டும். சீனியர் முறையாக சொல்லித் தரவும் மாட்டார். இடையில் சீனியர் வீட்டு வேலைகளை எல்லாம் செய்ய வேண்டும். ஆசிரியர் தொழிலிலும் சிக்கல் இல்லாமல் இல்லை. ரௌடித்தனமாக உள்ள மாணவர்களை வகுப்பில் ஆசிரியர் சமாளிக்க வேண்டும். தலைமை ஆசிரியர்களுக்கு எந்த நேரமும் பள்ளியில் ஸ்ட்ரைக் மற்றும் வன்முறை வெடிக்கும் ஆபத்து இருக்கிறது. திருமணம் செய்கின்ற பெண்களுக்குக்கூட வரதட்சணை கொடுமை என்ற ஆபத்து இருக்கிறது.

இப்படி ஆபத்திற்குப் பயந்து யாரும் எந்தத் துறையிலும் இறங்குவது இல்லை என்றால் எவருக்கும் எந்த முன்னேற்றமும் இல்லை என்றாகிவிடும். ஆகவே சாதிக்க விரும்புகின்றவர்கள் ஆபத்தைத் தைரியமாகச் சந்தித்தே ஆக வேண்டும். வருகின்ற ஆபத்துக்களைத் தைரியமாகவும், வெற்றிகரமாகவும் சமாளிக்கின்றவர்களுக்கு வாழ்க்கை நல்லவிதமாக ரெஸ்பான்ஸ் வழங்குகிறது. அத்துடன் நாம் சாதித்து விட்டோம் என்ற சந்தோஷமும் அவர்களுக்கு வருகிறது.

**4. சமயோசித ஆற்றல்:** எல்லா தேசங்களுக்கும் இயற்கை வளங்கள் அபரிமிதமாகக் கிடைக்கிறது என்று சொல்ல முடியாது. சில இயற்கை வளங்கள் இருக்கும், சில இருக்காது. எந்த ஒரு பொருளையுமே இயற்கை வளம் என்று நாமாகக் கருத முடியாது. நம் அறிவுதான் எந்தவொரு பொருளுக்கும் உபயோகத்தைக் கண்டுபிடித்து அதை இயற்கை வளமாக மாற்றுகிறது. உதாரணமாக, கடற்கரையில் உள்ள மண்ணிற்கு நீண்டகாலமாக எந்த உபயோகமும் இல்லாமலிருந்தது. பின்னர் ஒரு கட்டத்தில் மணலை கண்ணாடியாக மாற்றலாம் என்று தெரிய வந்த போது அது நம் பார்வைக்கு ஒரு உபயோகமான பொருளாக மாறிவிட்டது. வறண்ட பாலை நிலங்களைப் பொதுவாக எதற்கும் பயன்படாது என்றுதான் நினைப்பார்கள். ஆனால் அப்படிப்பட்ட பாலை நிலங்களில் வளரக் கூடிய சில உபயோககரமான செடிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஜோஜோபா என்ற ஒரு செடி இருக்கிறது. அச்செடியின் விதையிலிருந்து கிடைக்கும் ஒருவித எண்ணெய் நல்ல லூப்ரிகேட்டிங் ஆயிலாக செயல்படுகிறது என்று கண்டுபிடித்துள்ளனர். இந்தச் செடி பாலைவனச் சூழலில் நன்றாக வளர்வதால் இந்தச் செடியை வளர்ப்பதற்காக பாலைவனப் பிரதேசங்களுக்கு நல்ல முக்கியத்துவம் வந்து விட்டது.

சாதிப்பது என்பதைப் பற்றிப் பேசும்போது, சமயோசித ஆற்றல் என்றால் என்ன என்று கேட்கலாம். பிரச்சனைகளைத் தீர்க்க பல்வேறு வழி கண்டுபிடிப்பதைச் சமயோசித ஆற்றல் என்கிறோம். பசியால் வாடுபவனுக்கு எட்டாத உயரத்தில் மரக்கிளையில் ஒரு பழம் தென்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவ்வளவு தூரம் ஏற அவன் உடலில் தெம்பும் இல்லை. ஆனால் பசியும் உடனடியாகத் தீரவேண்டும். அந்த நேரத்தில் தரையில் ஒரு கல் கிடந்தால் அந்தக் கல்லை ஒரு கருவியாக்கி, அதை விட்டெறிந்து அந்தப் பழத்தை விழவைத்து தன் பசியை ஆற்றிக் கொள்கிறான். இப்படிச் செயல்படுவதை நாம் சமயோசித ஆற்றல் என்கிறோம்.

பொருளாதார முன்னேற்றத்தைப்பற்றி நாம் பேசும்போது சமயோசித ஆற்றலுக்கு வேறு அர்த்தம் கொடுக்கலாம்.



அதாவது சில தேவைப்படுகின்ற இயற்கை வளம் இல்லாதபோது, அதற்குப் பரிகாரமாக வேறு வகைகளில் அந்தக் குறையை நிறைவு செய்ய முயற்சிப்பதை நாம் சமயோசித ஆற்றல் என்று சொல்லலாம். உதாரணமாக ஜப்பான் தேசத்தில் கனரக தொழிற்சாலைகளை அமைக்கத் தேவையான இரும்பு உலோகம் இயற்கை வளமாக இல்லை. அது இல்லை என்பதால் அவர்கள் சோர்ந்துபோய் விடவில்லை. மாறாக, அது எந்தளவு தேவைபடுகிறதோ அந்தளவு அவர்கள் அதை இறக்குமதி செய்து கொண்டார்கள். மேலும் அந்நாட்டு தொழிலாளிகள் தம் தொழில் திறனையும் மேம்படுத்திக் கொண்டுள்ளார்கள். இவ்வகையில் இரும்பு அரிபொருளாக இருப்பதால் கிடைக்கின்ற இரும்பை வைத்துக் கொண்டு விலையுயர்ந்த கார்களை உற்பத்தி செய்ய கற்றுக் கொண்டுள்ளார்கள். இயற்கை வளங்கள் இல்லாமல் போனதை அவர்கள் தம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாக என்றுமே சொன்னது கிடையாது. இருக்கின்ற சூழ்நிலையில் என்ன மாற்று ஏற்பாடு செய்ய முடியுமோ அதைச் செய்து தொடர்ந்து முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இஸ்ரேல் நாட்டவர் தண்ணீர் பற்றாக்குறைக்கும் இதே அணுகுமுறையைத்தான் கையாண்டுள்ளார்கள். அதாவது பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் சொட்டு நீர் பாசனத்தை மேற்கொண்டுள்ளார்கள். அந்தச் சொட்டு நீர் பாசனத்திற்குச் செடிகள் நல்ல முறையாக ரெஸ்பான்ஸ் வழங்குவதால் இஸ்ரேல் விவசாயிகள் பூந்தோட்ட மற்றும் பழத் தோட்டத் துறையில் நல்ல வருமானம் பார்க்கிறார்கள். நம்நாடு கூட சமயோசித ஆற்றலை நன்றாக வெளிப்படுத்துகிறது. நம் நாட்டில் லேபருக்குச் சம்பளம் குறைவு. அதை ஒரு காரணமாக வைத்து வெளிநாட்டுக் கார் கம்பெனிகள் இங்கு நிறைய கார் தொழிற்சாலையை நிறுவியுள்ளார்கள். நமக்கு ஒரு பக்கம் வேலை கிடைக்கிறது. அதேசமயத்தில் அவர்களுக்கும் மலிவான விலையில் கார் உற்பத்தியாகிறது. இதே அடிப்படையில் கால் சென்டர்கள் மற்றும் B.P.O. நிறுவனங்கள் நிறைய இந்தியாவில் இயங்குகின்றன.

சமயோசித ஆற்றல் என்பது அறிவுத் திறனை மட்டும் நம்பி இருப்பது இல்லை. நிறைய திரைப்பட கதாநாயகிகள் ஏழை குடும்பங்களிலிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அறிவோ, பணமோ இல்லை என்றாலும் அழகு இருக்கிறது. அந்த அழகை அவர்கள் திரைப்படத் துறையில் பயன்படுத்தி பெரிய வருமானத்தைப் பார்க்கிறார்கள். அப்படி அறிவைப் பயன்படுத்தி முன்னுக்கு வருவது ஒரு சாதனை என்றால், அழகைப் பயன்படுத்தி திரைப்படத் துறையில் முன்னுக்கு வருவதும் ஒரு சாதனைதான்.

5. **ஆர்வம்:** ஆர்வம் நம் சாதனைக்கு மிகவும் அவசியம். ஏனென்றால் அந்த ஆர்வம்தான் நாம் சாதிப்பதற்குத் தேவை-யான எனர்ஜியை வழங்குகிறது. மேலை நாட்டினர் நம் நாட்டினரைவிட அதிக சுபிட்சமாக இருக்கிறார்கள் என்றால், சாதிக்க வேண்டும் என்ற இடத்தில் நம்மைவிட அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். நாமும் நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று பேசுகிறோமே தவிர நம்முடைய ஆர்வம் பேச்சோடு நின்றுவிடுகிறது. ஆனால் வெளிநாட்டவர்களைப் பொறுத்த வரையில் பேசுவதைவிட சாதிப்பதில் அவர்கள் ஆர்வம் நிறைய காட்டுகிறார்கள். இதனாலேயே ரிசல்ட் என்று பார்த்தால் ஆர்வம் எங்கே அதிகமாக உள்ளதோ அங்கேதான் ரிசல்ட் வருகிறது.

நம் நாட்டில் ஆர்வத்தைப் பேராசையுடன் இணைத்துத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். பேரார்வம் என்பதும் பேராசை என்பதும் வேறுவேறு. நம் தகுதிக்குமீறி ஆசைப்படும் போதும், வேலையைக் குறைவாகச் செய்து அதிக சம்பளம் கேட்கும்போதும் நாம் அதை பேராசை என்கிறோம். அப்படிப் பேராசை பிடித்தவர்கள், நேர்மையாக சம்பாதிக்க முடியாத போது, நேர்மையற்ற முறைகளிலும் சம்பாதிக்கத் துணிந்து விடுகிறார்கள்.

ஆனால் நான் குறிப்பிடுகின்ற ஆர்வத்திற்கும், பேராசைக்கும் சம்பந்தமில்லை. நம் மனதில் வைத்துள்ள குறிக்கோள்களை அடைவதற்கு எடுக்கக் கூடிய அதிகபட்ச முயற்சிகளை விரும்பி எடுக்கின்ற உணர்விற்கு நான் ஆர்வம் என்று பெயரிடுகிறேன்.



நாம் இப்படி அதிகபட்ச முயற்சி எடுக்கும்போதுதான் நம் சாதனைக்கு இடையூறாக இருக்கின்ற பணப்பற்றாக்குறை, மந்தமான மார்க்கெட், ஒத்துழைக்காத லேபர், மோசமான வானிலை போன்ற இடையூறுகளை எல்லாம் சமாளிக்கும் தெம்பு நமக்குக் கிடைக்கிறது. ஆன்மீகத்திற்கு வரும்போது இதே முன்னேறும் ஆர்வத்தை நாம் இறை ஆர்வம் என்கிறோம். நாம் எந்தத் துறையில் இருந்தாலும் தீவிர ஆர்வம் என்பது இன்றியமையாததாகும். வாழ்க்கையைவிட பூரண யோகம் மிகவும் கடினமான துறையாகும். ஆகவே, வாழ்க்கையில் சாதிக்கும் ஆர்வத்தைவிட ஆன்மீகத்தில் சாதிக்கும் ஆர்வம் பல மடங்கு அதிகமாக இருந்தால்தான் ஆன்மீகத் துறையிலேயே நாம் அடியெடுத்து வைக்க முடியும். சாதாரண வாழ்க்கையின்மேல் நமக்கு இருக்கும் பிடிப்புகளை முறியடிக்க வேண்டும் என்றால் இத்தகைய தீவிர ஆர்வம் நமக்குத் தேவைப்படுகிறது.

நம்முடைய பிரச்சனைகளையும், பிரார்த்தனைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் அன்னையை நாடுகிறோம் என்றால், அது ஒன்றும் அவருக்குச் சிரமமான காரியமில்லை. நம்முடைய குறைபாடுகளையும் மீறி அருள் நாம் கேட்பவற்றை நமக்கு வழங்குகிறது. ஆனால் நாம் வேண்டுவது ஆன்மீக முன்னேற்றம் என்றால், அந்த முன்னேற்றம் நம் குறைபாடுகளை மீறி வராது. மாறாக ஆன்மீக முன்னேற்றத்தின்மேல் இருக்கும் அளவு கடந்த ஆர்வத்தின் காரணமாக அதன் பொருட்டு நம் குறைபாடுகளை விட முன்-வந்தால்தான் அந்த ஆன்மீக முன்னேற்றமே கிடைக்கும். நமக்கு வேண்டியது அருள் என்னும்பட்சத்தில் அந்த இடத்தில் அன்னை நம்மிடம் கருணை உள்ளம் கொண்ட தாயார்போல் நடந்து கொள்வார். ஆனால், நாம் நாடுவது ஆன்மீக முன்னேற்றம் என்னும்பட்சத்தில் அன்னை ஆன்மீக குருவாக நம்மிடம் நடந்து கொண்டு அதற்குண்டான கண்டிப்பு, கறாருடன்தான் நம்மிடம் நடந்து கொள்வார்.

6. **ஆர்கனைசேஷன்:** இப்போது சாதனைக்கு உதவும் முக்கிய காரணமாக நான் ஆர்கனைசேஷனை எடுத்துக் கொள்கிறேன்.

பலனைக் கொண்டு வருவதற்கு சிஸ்டமேட்டிக்காக செயல்படுவதை நான் ஆர்கனைசேஷன் என்றேன். ஆர்கனைசேஷன் என்பது ஒரு அறிவுத் திறனாகும் என்பதால் அது நம் கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாகும். மேலும் ஆர்கனைசேஷனைப் பின்பற்றும் ஸ்தாபனங்களையும் ஆங்கிலத்தில் ஆர்கனைசேஷன் என்றுதான் சொல்கிறோம். இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் கண்ணுக்குத் தெரியக் கூடியவையாக திடமாகவே காட்சியளிக்கும். ஆர்கனைசேஷன்கள் எப்படிச் சாதிக்கின்றன என்ற கேள்வியை எழுப்பலாம். நம்முடைய முறைப்படுத்தப்படாத எனர்ஜிகளுக்கு ஆர்கனைசேஷன் ஒரு **direction** கொடுக்கிறது. இப்படி **direction** கொடுத்த பின்பு அந்த எனர்ஜிகளை எல்லாம் ஒரு **production** சிஸ்டம் மூலம் அனுப்புகிறது. இப்படி **production** சிஸ்டம் மூலம் எனர்ஜிகளை அனுப்பும்போது அவை நாம் எதிர்பார்க்கும் பலனை அனுப்புகின்றன. இப்படி **production** சிஸ்டம் மூலம் எனர்ஜி நகரும்போது ஸ்கில்லுடன் இந்த எனர்ஜி கூட்டு சேருகிறது. இப்படி ஸ்கில்லும், எனர்ஜியும் கூட்டு சேரும்போது நல்ல ரிசல்ட் கிடைக்கிறது.

உதாரணத்திற்கு நாம் குழந்தைகளை எடுத்துக் கொள்வோம். குழந்தைகளின் எனர்ஜி முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. குழந்தைகளை அவர்கள் இஷ்டத்திற்கு விட்டால், நாள் முழுவதும் விளையாட்டிலேயே அந்த எனர்ஜியை செலவழித்து அதை விரயம் செய்து விடுவார்கள். ஆனால் பாடம் கற்பிப்பதற்காகப் பள்ளிகளுக்குக் குழந்தைகளை அனுப்பும் போது இதே குழந்தைகளின் எனர்ஜி பாடம் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு ஸ்கில்லாக மாறுகிறது. பள்ளியில் ஒரு சிஸ்டம் உள்ளது. அதாவது வகுப்பறைகள், ஆசிரியர்கள், பாடப் புத்தகங்கள், மற்றும் டைம் டேபிள் எல்லாம் இருக்கிறது. இப்படிப்பட்ட சிஸ்டத்திற்குள் குழந்தைகள் வரும்போது அவர்களுடைய முறைப்படுத்தப்படாத எனர்ஜிகள் எல்லாம் முறைப்படுத்தப்பட்டு ஒரு **direction** பெறுகின்றன. இந்தச் சமயத்தில் ஆசிரியருடைய கல்வி, கற்றுக் கொடுக்கும் திறன் ஆகியவைகள் மாணவர்கள் தேடுகின்ற அறிவை



வழங்குகின்றது. இப்போது ஆசிரியரின் கற்றுக் கொடுக்கும் திறனும், மாணவனின் கற்கும் திறனும் இணைந்து அறிவு என்ற முடிவான பலனைக் கொடுக்கின்றன.

இப்படி வகுப்பறை ஆசிரியர்கள், பாடப் புத்தகம், டைம் டேபிள் என்றெல்லாம் அடங்கிய பள்ளி என்ற ஆர்கனைசேஷன் இல்லாது போனால், அதாவது இப்படிப்பட்ட ஆர்கனைசேஷன் மூலம் செயல்படாமல் போனால் மாணவர்களுக்கு அறிவு என்ற ரிசல்ட் கிடைக்காது என்று தெரிகிறது. இப்படி எல்லாவிதமான வேலைகளுக்கும் சமூகத்தில் அதற்கதற்குரிய ஆர்கனைசேஷன் இருக்கத்தான் செய்கின்றன. அறிவை வழங்க பள்ளிகள் உள்ளன என்றால், பொருட்களைத் தயாரிக்க தொழிற்சாலைகள் உள்ளன. நீதி மன்றங்கள் நீதியை வழங்குகின்றன. தபால் நிலையங்கள் தபாலை டெலிவரி செய்கின்றன. கடைகள் பொருட்களை விற்கின்றன. மருத்துவமனைகள் வியாதியிலிருந்து நிவாரணம் அளிக்கின்றன. இப்படிப்பட்ட எல்லா ஸ்தாபனங்களிலும் வேலை செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. யார் எந்த வேலையை எப்படிச் செய்ய வேண்டும் என்று அந்த சிஸ்டம் சொல்கிறது. உதாரணமாக, சிக்னல் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இம்மாதிரியே டைம் டேபிள்கள் வகுப்பறைகளில் பாடம் நடத்துவதை நிர்ணயிக்கின்றன. சட்ட விதிமுறைகள் நீதி வழங்குவதை நிர்ணயிக்கின்றன. உற்பத்தி விதிமுறைகள் என்ன உற்பத்தியாகிறது என்பதை நிர்ணயிக்கின்றன.

ஒரு தொழிற்சாலையிலோ மற்றும் அலுவலகத்திலோ சாதனையைக் கொண்டு வருவதற்குத் தேவையான முக்கிய காரணங்களை ஒன்றுடன் ஒன்று கோ-ஆர்டினேஷன் செய்யும் வேலையை ஆர்கனைசேஷன் செய்கின்றன. உதாரணமாக ஒரு கம்பெனியில் வேலை நடக்க வேண்டும் என்றால் ஐந்து முக்கியக் காரணிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வேலை செய்ய வேண்டும். ஒரு கம்பெனி என்றால் அங்கே ஊழியர்கள், பணம், டெக்னாலஜி, விற்பனை செய்யப்படும் பொருட்கள் மற்றும் அதை வாங்குகின்ற கஸ்டமர்கள் என்று ஐந்து காரணிகள் இருக்கின்றன. இந்த ஐந்து காரணிகளும் தங்களுக்கிடையே

அழகாக ஒருங்கிணைந்து செயல்படும் பொழுது கம்பெனியில் விற்பனை ஒழுங்காக நடைபெறுகிறது. கம்பெனியும் நன்றாக முன்னேறுகிறது. இப்படிப்பட்ட கோ-ஆர்டினேஷனில் குறை வரும்போது எந்தளவிற்குக் குறைவருகிறதோ அந்தளவிற்குச் செயல்பாடும் பாதிக்கப்படுகிறது. கம்பெனியில் விற்பதற்கு நல்ல பொருள் இருக்கலாம். ஆனால் விற்பனைப் பிரிவில் இருப்பவர்கள் உற்சாகம் இன்றி செயல்படும்பொழுது விற்பனை குறைகிறது. அதன் விளைவாக கம்பெனி வருமானமும் குறைகிறது. விற்பனைப் பிரிவில் உள்ளவர்கள் உற்சாகமாக செயல்பட முன்வரலாம். பொருளும் நல்ல தரமானதாக இருக்கலாம். ஆனால் கம்பெனியில் நிதி பற்றாக்குறை இருந்தால் கஸ்டமர் எதிர்பார்க்கும் அளவிற்கு சப்ளை செய்ய முடியாமல் போகிறது. இதன் விளைவாகவும் கம்பெனியில் வருமானம் பாதிக்கப்படுகிறது.

மேனேஜ்மெண்டிற்கும், ஊழியர்களுக்கும் நல்ல சுமுகம் நிலவுகின்ற கம்பெனியில் விற்பனையும், வருமானமும் அதிகரிப்பதை நாம் பார்க்கலாம். மேலும் சமூகத்தின் தேவைகளுடன் ஒத்துப்போகின்ற கம்பெனிகள், நல்ல வளர்ச்சி அடைவதையும் பார்க்கின்றோம். உதாரணமாக, சமூகம் நல்ல தரமான கல்வியை இப்போது பள்ளிகளில் எதிர்பார்க்கிறது. அதற்காகக் கூடுதல் செலவு ஆகும் என்றாலும் அதைக் கொடுக்கவும் தயாராக உள்ளது. இம்மாதிரியே மருத்துவ மனைகளிலிருந்து நல்ல தரமான சிகிச்சையை எதிர்பார்க்கிறது. அந்தச் சிகிச்சை பெறுவதற்கு அரசு மருத்துவமனைகளைவிட இங்குச் செலவு கூடுதலாக இருக்கும் என்று தெரிந்தும் மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

**7. ரிசப்டிவிடி Receptivity:** அன்னையின் அருளுக்கு நாம் ரிசப்டிவாக இருப்பது நாம் சாதிப்பதற்கு மிகவும் அவசியமாகும். நாம் சொந்தமாகச் சாதிக்க வேண்டுமென்றால், அதில் நமக்கு எவ்வளவு திறமை இருக்கிறதோ அந்தளவிற்குத்தான் சாதிக்க முடியும். ஆனால், அன்னையை நாம் உள்ளே வர அனுமதித்தால், அவர் நம் பர்சனாலிடியைப் பல மடங்கு விரிவடையச் செய்து அந்தளவு நம் சாதனையை உயர்த்துகிறார்.



நம் ரிசப்டிவிடியை நாம் அதிகரிப்பது எப்படி என்ற கேள்வி நமக்கு எழுகிறது. அருள் எப்படி நம்மைத் தேடி வருகிறதோ அப்படியே அதை நாம் ஏற்றுக்கொள்வோம் என்ற மனோபாவம் நமக்கு இருந்தால் அந்த ஒன்று மட்டுமே நம் ரிசப்டிவிடியை அதிகரிக்க உதவும். அருள் நமக்கு ஒரு நல்ல வேலையைக் கொண்டு வரலாம். ஆனால் கிடைத்த வேலை வெளியூரில் அமையலாம். கிடைக்கும் சம்பளம் அதிகமாக இருந்தாலும், உள்ளூரில் இல்லை என்பதால் நாம் அந்த வேலையை மறுக்கலாம். அவ்வாறு மறுக்கும்பொழுது அருள் நமக்குக் கொண்டு வந்த வாய்ப்பு வீணாகிப் போகிறது. இம்மாதிரி பல வழிகளில் நாம் நம் நிபந்தனைகளை அருளின்மேல் திணிக்கிறோம். இப்படியெல்லாம் திணிக்காமல், அருளை நிபந்தனையின்றி நாம் ஏற்றுக்கொள்ள முடிவெடுத்தால் நம் சாதனையும் தங்குதடையின்றி தொடர்ந்து கொண்டேயிருக்கும். சைத்தியக் கல்வி என்ற தன்னுடைய கட்டுரையில் நமக்கு வருகின்ற வேலையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர நாம் விரும்பும் வேலைதான் நமக்கு வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கக் கூடாது என்று அன்னை வலியுறுத்துகின்றார்.

**Consultant**-ஆக பணிபுரிய விரும்புகின்ற ஒரு அன்பரை எடுத்துக் கொள்வோம். அவர் தனக்குக் கிடைக்கும் முதல் கிளையண்டை பத்து அல்லது இருபது கோடி **turnover** செய்பவராக எதிர்பார்க்கலாம். ஆனால் அவருக்குக் கிடைக்கின்ற முதல் கிளையண்ட் வருடத்திற்குப் பத்து லட்சம்தான் **turnover** செய்பவராக அமையலாம். அவருடைய தொழிற்கூடம் மிகவும் சாதாரணமாகத் தெரியலாம். இந்த நிலையிலும் இவர்தான் அன்னை நமக்கு அனுப்பியிருப்பது என்று அன்பர் ஏற்றுக் கொண்டார் என்றால் அவருக்கு முறையான ரிசப்டிவிடி இருக்கிறது என்றர்த்தம். இப்படி இல்லமால் பெரியதாக எதிர்பார்க்கும்போது ஏன் சிறியதாக வந்துள்ளது என்று அவர் ஏற்க மறுத்தார் என்றால் அவருக்கு ரிசப்டிவிடிக்கு பதிலாக பிடிவாதம்தான் இருக்கிறது என்றர்த்தம். கிளையண்ட் சிறியவராக இருந்தாலும் அவரை ஏற்கும்போது அக்கம்பெனியின்

**performance**-ஐ மேம்படுத்தும்போது அதன் வழியே அடுத்தடுத்து பெரிய கிளையண்டுகள் வர வாய்ப்புள்ளது.

பொதுவாக **value implementation**-ஐ நாம் எந்தளவிற்குக் கடைப்பிடிக்கிறோமோ அந்தளவிற்கு ரிசப்டிவிடி அதிகரிக்கிறது. நாம் இருக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டு நமக்குரிய கணக்கு வழக்குகளை முறையாக எழுதிக்கொண்டு, வேலை நிமித்தமாக பழகுவோருடன் சுமுகமாக உறவு வைத்துக் கொண்டு, **punctuality**-யையும் கடைப்பிடித்துக்கொண்டு, மெதுவாகப்பேசி, அனாவசிய வேலைகளில் ஈடுபடாமல், நம் எனர்ஜியை தேவையில்லாத வேலைகளில் செலவிடாமல், அதைச் சேகரம் செய்து கொண்டும் இருந்தால், நம்முடைய பர்சனாலிடி பலமடங்கு மேம்படுத்தப்படும். இப்படி எந்தளவிற்குப் பர்சனாலிடி மேம்படுகிறதோ, அந்தளவிற்கு அருளும் நம் வாழ்க்கையில் உள்ளே வரும்.

நாம் இருக்கின்ற நிலையில் அதிகபட்ச முயற்சி எடுப்பது எப்பொழுதும் நல்லது. இப்படி அதிகபட்ச முயற்சி எடுத்து நாம் ஓய்ந்து போகும்போது நமக்குத் தேவையான கூடுதல் எனர்ஜியை அருள் வழங்க ஆரம்பித்துவிடும். இந்த ரீதியில் பார்க்கப்போனால் பதவி உயர்விற்கு ஆசைப்படக் கூடிய ஊழியர் தன் கையில் இருக்கும் வேலையை எவ்வளவு **perfect**-ஆகச் செய்ய முடியுமோ அவ்வளவு **perfect**-ஆகச் செய்ய வேண்டும். தம் கம்பெனியின் விற்பனையை அதிகரிக்க விரும்பும் தொழிலதிபர் தன்னுடைய உற்பத்தித் திறனை முதலில் முழுமையாகத் தீர்க்க வேண்டும். விற்பனையை உயர்த்த விரும்பும் சேல்ஸ்மேன் அவரால் முடிந்த அதிகபட்ச முயற்சியை எடுக்க வேண்டும். இப்படி அவரவருக்குண்டான முழு முயற்சியை எடுக்கும்போது அடுத்த உயர்நிலைக்குப் போகத் தேவையான கூடுதல் எனர்ஜியை அருள் உரிய நேரத்தில் வழங்குகிறது. அதாவது இதற்குமேல் செலவு செய்ய எனர்ஜியே கிடையாது என்ற நிலைக்கு அவர்கள் வரும்போது அந்தக் கட்டத்தில் அருள் தலையிட்டு கூடுதல் எனர்ஜியைக் கொடுக்கிறது. அப்படி அடுத்த உயர்நிலைக்குப்போக



முடியாதவர்கள் தாம் எடுக்க வேண்டிய அதிபட்ச முயற்சியை எடுக்கவில்லை. அதனால் அருள் தனக்கு ஒத்துழைக்க வரவில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே மேற்சொன்ன கடின உழைப்பு, அறிவுத்திறன், ரிஸ்க் எடுப்பது, விடாமுயற்சி, சமயோசித ஆற்றல், ஆர்வம், ஆர்கனைசேஷன் ஆகிய நற்பண்புகளோடு ரிசப்டிவிடி, சமர்ப்பணம், சரணாகதி போன்ற அன்பருக்குரிய பண்புகளையும் அன்னை அன்பர் எவர் சேர்த்துக் கொண்டாலும், அவருடைய சாதனைக்கு வரம்போ, முடிவோ இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முற்றும்

## ஜீவிய மணி

**சுத்தம், கடின உழைப்பு, பக்தி, நம்பிக்கை, கடமையை முடித்தல், உரிமையைப் பாராட்டாதது, உள்ள பிடியை விடுவது, கேட்க மறுப்பது, பொறுமை, எதிர்பார்க்காதது, முப்பது வருடங்களானாலும் நம்பிக்கை இழக்காதது, திறமையை, பலனை எதிர்ப்பார்க்காமல் செயல்படுத்துவது, அதிகாரம் உள்ள இடத்தில் பணிந்து போவது, பிறர் நோக்கை ஏற்பது, அனைத்தையும் மறந்து அன்னையை நம்புவது, எதையும் நம்ப முடியாத நேரம் அன்னையை அழைப்பது, செய்வன திருந்தச் செய்வது, நம்ப முடியாததை ஆசையின்றி பக்தியால் நம்புவது, நிதானமாக நடப்பது, முறை வழுவாதது, கெட்டதை விட்டு நல்லதை நாடுவது, நல்லதையும், கெட்டதையும் விட்டு அன்னையை நாடுவது, அறிவைக் கடந்து ஆத்மாவை நம்புவது, சமர்ப்பணம் செய்வது ஆகியவை Life Response தரும்.**

அன்னை இலக்கியம்

# நல்லதோர் வீணை செய்து

இல. சுந்தரி

**Life Divine**

*நல்லது கெட்டதைத் தன்னுட்கொண்டது. கெட்டதின் வித்து நல்லது. கெட்டது விலக்கப்பட வேண்டியதில்லை. ஏற்று நல்லதாகத் திருவுருமாற்றப்பட வேண்டியது. அத்திருவுருமாற்றம், குறையை விலக்குவதோடல்லாமல், குறையை அதற்கெதிரான நிறைவாக மாற்றும் பொழுது அந்நிறைவு நாமறிந்த நிறைவைவிட உயர்ந்ததாக இருக்கும்.*

*வாழ்க்கையிலுள்ள எந்தப் பிரச்சனையையும் இந்நூல் மூலம் தீர்க்க முடியும்.*

*நூலைப் பயன்படுத்தி ஒரு அதிசயத்தை நிகழ்த்தலாம். வியாதியை மணி, மந்திரம், ஔஷதம், குணப்படுத்தும். அவற்றால் தீராத வியாதியுண்டு. நூல்* **(Life Divine)** *அதைக் குணப்படுத்தும்.*

*இந்நூலின் பெயர் காதில் விழுவது, நூல் கண்ணில்படுவது சுபசகுனம்.*

★★★

இருள் பிரியத் தொடங்கும் அதிகாலைப் பொழுது. இரயில் பெட்டி தன் நீண்ட பயணத்தை நிறுத்தி ஓய்வெடுக்கும் நேரம். தஞ்சை சந்திப்பு மக்கள் கூட்டம் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. கண்விழித்த வசந்தி எல்லோரும் இறங்கட்டும் என்று பொறுமையாக, வாஷ்பேசினில் முகங்கழுவி, டவலால் துடைத்துக் கொண்டு புத்துணர்வுடன் தன் டிராவலிங் பேக்கை எடுக்க வந்தபோது பெட்டியே காலியாகியிருந்தது. சீட்டின் ஜன்னலோர மூலையில் யானைக்குட்டி போல் ஒரு புத்தகம். அடடா! யாரோ விட்டுவிட்டுப் போய்விட்டார்கள் போலிருக்கிறது என்று கூறிக்கொண்டே இரண்டு கைகளாலும் புத்தகத்தை எடுத்தாள். **'Life Divine'** என்று பெயர் தெரிந்தது. 'பெயரே அழகாக இருக்கிறதே. பாவம், யாருடையதோ?' என்று சுற்றும் முற்றும் பெட்டிக்கு வெளியே எட்டிப் பார்த்தாள்.



புத்தகத்தின் சொந்தக்காரார் மூச்சிரைக்கத் தேடி வருவார் என்றெண்ணி ஒரு மணி நேரம் பிளாட்பாரத்தில் காத்திருந்தாள். ஒருவரும் வந்திலர். பெயர் ஏதேனும் இருக்குமோ என்று அட்டையைப் புரட்டினாள். ஒரு மடித்த தாள் மட்டுமிருந்தது. அதில் ஏதேனும் புத்தகத்தின் சொந்தக்காரரைப்பற்றி இருக்குமோ என்று எண்ணிப் பார்த்தாள்.

வாசகர்களே! தொடக்கத்தில் நீங்கள் படித்த கருத்துகளே அந்தத் தாளில் எழுதப்பட்டிருந்தது.

இவள் ஒரு ஆன்மீகவாதி. இளம் பெண். திருமண ஆர்வமின்றி ஆன்மீக நாட்டமுடையவள். பெரிய அலுவலகமொன்றில் பொறுப்பான பதவியில் இருப்பவள். ஒரு முக்கியமான அலுவல் காரணமாக சென்னை சென்று திரும்பும் போதுதான் மேற்படி செய்திகளுடன் பகவான் ஸ்ரீ அரவிந்தரின் **'Life Divine'** புத்தகமும், அதற்குள்ளே அதுபற்றிய ஒரு சான்றோரின் கருத்துகள் எழுதிய தாளும் கிடைக்கப் பெற்றாள்.

இது பணமாகவோ, பொருளாகவோ இருந்திருந்தால் போலீஸில் ஒப்படைத்திருப்பாள். அவளுக்கு மிகவும் பிடித்த புத்தகம். அதுவும் அவள் பெரிதும் விரும்பும் 'தெய்வீக வாழ்வு' பற்றியது. அதன் சிறப்புக் குறித்த குறிப்புவேறு. உரியவர் யாரும் வந்து கேட்கவுமில்லை. கடவுள் தன்பொருட்டு அளித்தது என்று எண்ணி பவித்திரமான உணர்வுடன் அதை எடுத்துக்கொண்டு தான் தங்கியுள்ள ஹாஸ்டலுக்குப் போனாள்.

இயல்பாகவே பொருட்களை ஜீவனுள்ளதாக மதித்து நடக்கும் அவளுக்கு அப்புத்தகத்துடன் உயிர்த்துடிப்புள்ள தொடர்பு வந்தது. ஆரோக்கியமும் அழகும் ததும்பும் கள்ளமில்லாத சின்னக் குழந்தையைத் தூக்கிக் கொள்வதுபோல் உணர்வு கொள்வாள்.

பெற்றோர்கள் விபத்தில் இறந்ததால், பச்சிலைக்காடு என்ற தன் ஊரில் பெற்றோருடன் வசித்த வீட்டில் இருக்கப் பிடிக்காமல் இங்குப் பணிபுரியும் மகளிர் விடுதியில் தங்கி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். இந்தப் புத்தகம்

அவளுக்கு அருட்புதையல் ஒன்று கிடைத்தது போலிருந்தது. அதைப்படிக்கத் தொடங்கினாள். ஆர்வம் பெருகியது.

அவள் படித்த **M.A.** இந்நூலைப் படிக்க (ஆங்கிலம்) உதவியது என்று சொல்ல முடியாது. ஆர்வம் இருந்த அளவிற்கு விரைவாகப் படிக்க இயலவில்லை. ஒரே சொல் எத்தனையோ பொருள் கொள்ள இடமளித்தது. பொருத்தமான பொருளை கண்டறிய அவளிடமிருந்த ஐந்து அல்லது ஆறு சொல்லகராதிகள் துணைபுரியவில்லை. ஓரிரு பாராக்கள் பயின்றதுமே நூலாசிரியர் (ஸ்ரீஅரவிந்தர்) மீது அளவுகடந்த பக்தி எழலாயிற்று. தனிப்பட்ட எவர் மீதும் பற்றுக் கொண்டறியாத அவளுக்கு நாளுக்குநாள் ஸ்ரீ அரவிந்தர் மீது பற்று எழலாயிற்று. பற்றற்றவர் மீது எழும் பற்றல்லவா! தீங்கு விளைவிக்காததாய் இருந்தது. அதேகணம் ஓரத்தியாயத்துடன் நிறுத்திவிட்டு ஸ்ரீ அரவிந்தர்பற்றிய நூல்களையெல்லாம் தேடிப்பிடித்து படிக்கலானாள்.

இந்நூலைப் பெறக் காரணமான அந்தப் பயணம், அதாவது அவள் தன் தலைமை அலுவலகத்திற்குச் சென்ற பயணம் யாரும் எதிர்பார்த்திராத அளவில் இவள் பணிபுரியும் கிளை அலுவலகத்திற்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் கொண்டு வந்திருந்தது. குசேலர் கொண்டுவந்த அவலை ஸ்ரீ கிருஷ்ணர் தம் திருவாயில் இட்ட கணத்தில் குசேலர் மனை வளம் பெற்றது போல் இவள் '**Life Divine**' நூலைக் கையில் எடுத்த கணத்தில் காரியம் பூர்த்தியாயிருந்ததைக் கண்டாள்.

ஸ்ரீ அரவிந்தரைப்பற்றி அறிந்த செய்திகள் அவர்மீது அளவு கடந்த பக்தியுணர்வை ஏற்படுத்தவே, புரிந்து கொள்ளக் கடுமையான அந்நூலை ஸ்ரீ அரவிந்தரைத் தன் மனக்கோயிலில் எழுந்தருளச் செய்து, அவருடன் மானசீகமாய் ஆசிபெற்றுப் படிக்கத் தொடங்கினாள். தடையில்லாமல் படிப்பதற்காக அலுவலகத்திற்கு 'லீவ்லெட்டர்' அனுப்பி விட்டாள். படிக்கப்படிக்க புத்துணர்வும், தெம்பும் ஏற்படுவது உணர முடிந்தது. நீண்ட விடுமுறைக்குப்பின் அலுவலகம் வந்த அவளை எல்லோரும் பெருவியப்புடன் பார்த்தனர்.



நீண்ட நாள் நோயிலிருந்து நிரந்தர விடுதலை பெற்றவரின் தெளிவும், சந்தோஷமும் அவளிடம் காணப்பட்டது. இத்தனை நாட்கள் நீ எவ்வித சத்துணவு சாப்பிட்டாய்? எப்படிப்பட்ட செல்வங்களை அடைந்தாய். உன் முகத்தெளிவும், சந்தோஷமும் ஏதோ பெரிய அதிர்ஷ்டம் கிடைத்திருப்பதைப் போல் தெரிகிறதே? என்றனர்.

ஆமாம் எனக்கொரு புதையல் கிடைத்திருக்கிறது. அதனால் வந்த சந்தோஷம்தான் இது என்றாள்.

புதையலை நீ மட்டுமே அனுபவிக்கப் போகிறாயா? எங்களுக்குத் தரமாட்டாயா? என்றனர்.

நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அது எனக்குக் கிடைத்தது என்பதால் எனக்கே சொந்தமன்று. தேவைப்படுபவர்களுக்கு, ஏற்றுக்கொள்பவர்க்குத் தருவதற்காகவே உள்ளது என்றாள்.

அது எப்படிப்பட்டது? என்றனர். போகப்போகப் புரிந்து கொள்வீர்கள் என்றாள்.

தன் பெற்றோர் தனக்கென விட்டுச் சென்ற அந்த வீட்டைப் புதுப்பித்து, அங்கு ஒரு புதிய சூழலை உருவாக்கவும் தன் தவவாழ்வைத் தொடங்கவும் முடிவு செய்தாள்.

பாழடைந்த வீட்டைப் புதுப்பித்தாள். வீட்டைச் சுற்றி அழகுற பூஞ்செடிகளை நடச்செய்தாள். வீட்டின் ஒவ்வொரு இடத்தையும் தெய்வீகமும் அமைதியும் நிரப்ப வேண்டும் என்று கருதினாள். வீட்டின் தோற்றத்தில் புதுமையிருந்தது. அதனுள் பழங்கால முனிவர்களின், ரிஷிகளின் தெய்வீகச் சூழல் இருந்தது. பழைய வடிவங்களை உடைத்தெறிந்து விட்டு, அதன் உள்ளுறையும் சாரத்தைக் கைக்கொள்ளுங்கள் என்ற பகவானின் கருத்தை ஒவ்வொன்றிலும் மேற்கொள்ளத் தொடங்கினாள்.

இப்போதைக்கு வேலையை விட்டுவிடாமல் வீட்டிலும் வெளியிலும் ஒரு தவவாழ்வை மேற்கொண்டாள். அப்போது தான், அந்நூலைப்பற்றிய படித்த கருத்து ஒன்றை மெய்ப்பிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

அவள் அலுவலக மேலதிகாரிக்கு உடல்நலம் பாதித்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இரத்த அழுத்தம் காரணமாக உடலின் வலப்பக்கம் பாதிக்கப்பட்டது. வலக்கால். வலக்கை செயலற்றது. கடும் மருத்துவத்தை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர் இருப்பதாக மருத்துவர் கருதினர்.

இந்நிலையில் அலுவலக ஊழியர்கள் அவரைக் காணச் சென்றனர். வசந்தியும் சென்றிருந்தாள். அதிகாரியின் குடும்பத்தினர் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்திருந்தனர். ஊழியர்கள் தனித்தனியே அவர்களுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தனர். வசந்தி மட்டும் ஏதும் பேசாமல் மௌனமாய் நின்றாள்.

அன்று அலுவலகம் முடிந்து வீடு சென்றதும் அன்றாடப் பணிகளை முடித்துவிட்டு **'Life Divine'** நூலுடன் அதிகாரியை மருத்துவமனையில் பார்க்கப் போனாள். மருத்துவர்களிடம் அவர் உடல் நிலை பற்றி விசாரித்தாள். மருத்துவம் எவ்வளவு முன்னேறியிருந்தாலும் கர்மத்துடன் போட்டியிட முடியாதம்மா. அதிகபட்ச முயற்சிகளைத்தான் அவருக்கு மேற்கொண்டிருக்கிறோம். நிலைமை சீராவதற்குப் பதில் விபரீதமாகிக் கொண்டிருக்கிறது என்றனர்.

மருத்துவர்கள் அனுமதித்தால் அவருக்கு அங்கேயே தானொரு பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டாள்.

மருத்துவமனைக்குள் சடங்குகளுக்கு அனுமதி இல்லை என்றார் தலைமை மருத்துவர்.

தன் பிரார்த்தனையில் சடங்கு, சம்பிரதாயங்கள் ஏதுமில்லை-யென்றும் நோயாளியின் அறைக்குள் தன்னை அனுமதித்தால் போதும் என்றாள்.

அவர்கள் அவளை விநோதமாகப் பார்த்தனர். மருத்துவமனையின் நிபந்தனைக்கு ஊறு இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும் எனக் கூறி அனுமதித்தனர்.

கையுள் **'Life Divine'** புத்தகத்துடன் மனத் தயாரிப்புடன் உள்ளே சென்றாள்.



அதிகாரியிடம் அவர் பொருட்டு அங்கு தானொரு பிரார்த்தனை மேற்கொள்ளலாமா? என்று கேட்டாள்.

நோயின் பிடியில் விழும்பொழுது நல்லவர்க்கு ஞானம் வருகிறது. தான் இயங்குபவன் அல்லன். இயக்கப்படுபவன் என்ற உணர்வு வலுக்கிறது. சர்வவல்லமை உடையவனை உணரும் வாய்ப்பு அல்லவா அது?

தாராளமாய்ச் செய்யம்மா. குருடனுக்கு என்ன வேண்டும்? பார்வைதானே வேண்டும். எனக்கு இப்பொழுது நலம் வேண்டும். உன் பிரார்த்தனையில் நான் மனப்பூர்வமாய் ஒன்றிவிடுவேனம்மா என்று மிகுந்த தள்ளாமையுடன் கூறினார்.

நீங்கள் அமைதியாக இருங்கள். அதுபோதும் மனதில் எண்ண அலைகள் எழுந்தால் அங்கு இறைவனின் திருவடியைப் பதித்து அதையே எண்ணுங்கள் என்று மிருதுவாகக் கூறிவிட்டு அவர் படுக்கையின் அருகே அங்கிருந்த நாற்காலியை மெதுவாக எடுத்து வைத்து அவர் முகத்தைப் பார்த்தாற் போன்ற வாகில் அமர்ந்து மடியின் மீது **'Life Divine'** நூலைப் பிரித்து வைத்து அதில் லயித்துப் போனாள். இரண்டு பக்கங்கள் முடிந்தவுடன் புத்தகத்தை மூடியவண்ணம் அதிகாரியைப் பார்த்தாள். புத்தகத்தைப் பிரிப்பதற்கு முன் அவர் முகத்திலிருந்த அச்சம் கரைந்து போயிருந்தது. இலேசான நம்பிக்கை ரேகை தோன்ற ஆரம்பித்திருந்தது.

'சார்! இப்பொழுது எப்படியிருக்கிறது?' என்றாள் கனிவாக.

'தேறுவேனா என்ற அச்சம் போய்விட்டது. தேறுவேன் என்ற நம்பிக்கையும் வந்துவிட்டது. சாந்தமான உணர்வு வருகிறது', என்றார் தெளிவாக.

'நான் மீண்டும் நாளை வருகிறேன் சார்', என்று உத்தரவு பெற்றாள்.

தொடர்ந்து ஆறுநாட்கள் வந்தாள். படித்தாள். அவர் உடல் நிலை வியப்புறும் வண்ணம் மாறிவிட்டிருந்தது. மருத்துவர்-களுக்கு வியப்பு. விழுந்துவிட்ட கையும் காலும் ஆறே நாட்களில் குணமடைந்தது அவர்கள் மருத்துவ வரலாற்றில் இல்லாத சாதனை. குணமாகிவிடுவார் என்ற நிலையில்

உள்ளவர்க்கே ஆறுமாதங்கள் ஆகும் என்ற நிலையில் தாறு மாறாகச் சென்ற இவர் உடல்நிலை ஆறே நாட்களில் குண-மடைந்துவிட்டது என்பதை மருத்துவர்களாலேயே நம்ப முடியவில்லை.

அதிகாரியின் குடும்பத்தினர் ஆனந்தக்கண்ணீர் வடித்தனர். சில தினங்கள் மருத்துவமனையில் இருந்து விட்டு நிலைமை உறுதியானவுடன் வீட்டிற்கு அனுப்பிவிட மருத்துவர்கள் முடிவு செய்தனர்.

நாள்தோறும் அதிகாரியும், அவர் குடும்பத்தினரும் வசந்தி-யின் வரவிற்குக் காத்திருந்தனர். வீட்டிற்குச் செல்ல வேண்டிய நாள் வந்தது. வசந்தி உடனிருக்கவேண்டும் என்று விரும்பினர். அவளும் அவர்கள் விருப்பப்படி வீடுவரை சென்று அவரைக் கொண்டுவிட்டு வந்தாள்.

சில தினங்களுக்குப் பிறகு ஒருநாள் அவளிடம் அவள் பிரார்த்தனை பற்றி விசாரித்த போது, அந்தப் புத்தகம் தனக்குக் கிடைத்ததுபற்றியும், அதன் பயன்களாக ஒரு தாளில் எழுதப்பட்டிருந்த கருத்துகள் பற்றியும் அதைத் தான் செயல்-படுத்த விரும்பியதையும் கூறினாள்.

எனக்கு நம்பிக்கையிருக்கிறது. என்னுடல் நலமடைந்தது வெறும் மருந்துகளால் அன்று. நீ படித்த மந்திர மொழியால்தான் என்று கண் கலங்கிக் கூறினார். அன்றிலிருந்து அவளிடம் அவருக்குத் தனி மரியாதை உண்டாயிற்று.

இயல்பிலேயே நேர்மையும் செம்மையும் கொண்ட அவள் மேலும் மெருகிடப்பட்டாள். நூலை உயிரெனப் போற்றி வாழ்வைத் தவமென மாற்றினாள்.

அலுவலகத்தில் செய்தி பரவிற்று. ‘வசந்தி! நீ என்ன வைத்தியம் செய்தாய். உன்னால் குணமாயிற்று என்று சொல்கிறார்களே?’ என்றாள் ஒருத்தி.

நான் ஒரு மகானின் மந்திரமொழி வைத்திருக்கிறேன். நான் அந்த மந்திரத்தைப் படித்தேன். அவர் நம்பிக்கையுடன் தெளிவாக இருந்தார். அதன் மூலம் அந்தச் சக்தி செயல்பட்டு குணமடைந்தார் என்றாள்.



இவள் நோயைக் குணப்படுத்த, பிரச்சனைகளைத் தீர்க்க என்று இந்த நூலைப் பயன்படுத்தும் செய்தி பரவியது.

சிலர் வியந்தனர். சிலர் புகழ்ந்தனர். சிலரோ நம்பவும், ஏற்கவும் தயங்கினர். ஒரு புத்தகம் ஒருவர்க்குப் பாதுகாப்புத் தருமென்றால் **bulletproof**-க்குப் பதில் அதையே வைத்துக் கொள்ளலாமே எனக் கேலி செய்தனர்.

அவள் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. புகழ்ச்சியும், இகழ்ச்சியும் பாதிக்காத உள்ளவுறுதி கொண்டிருந்தாள். சடங்கு, சம்பிரதாயங்களைத் தவிர்த்தாள். பொய்யின் எல்லா வடிவங்-களையும் புறக்கணித்தாள். மன அழுக்குகளைச் சிறிதுசிறிதாகப் போராடி வெற்றி கொண்டாள். அகந்தை தலையெடுக்கும் போதெல்லாம் அயராது வெட்டி வீழ்த்தினாள்.

இவளைச் சிலர், பைத்தியக்காரி என்றும் பிழைக்கத் தெரியாதவள் என்றும் விமர்சித்தனர். இவளோ எதனாலும் பாதிக்கப்படாமல் தனக்குள் ஆழ்ந்து செல்லும் பயிற்சியை மேற்கொண்டு ஆனந்தமாயிருந்தாள்.

நாளடைவில் விமர்சனங்கள் ஓய்ந்தன. விமர்சிக்கத் தமக்குத் தகுதியில்லை என்றும் உணரலாயினர்.

அலுவலகத்தில் தலையெடுக்கும் பிரச்சனைகளை இந்நூலின் அடிப்படையில் களையத் தொடங்கினாள். எனவே, பிரச்சனைகள் இவளிடம் வந்தால் அலறி ஓடிவிடும். பகைமை பாராட்ட வருபவர் நண்பராகத் திருவுருமாறித் திரும்புவர்.

உடல் நலம் தேறிவிட்ட இவள் மேலதிகாரி முத்துசுவாமி பணிவோய்வு பெற்று சென்னை செல்லும்போது, இவளிடம் பாசத்துடன் பிரியாவிடை பெற்றதுடன், தன் சென்னை முகவரியைக் கொடுத்து அவள் உதவி தேவைப்படும் போது அழைப்பதாகவும், அவள் தயவு செய்து வருகை தர வேண்டும் என்றும் சொல்லிச் செல்கிறார்.

தொடரும்...

✧✧✧

## மௌனம்

கர்மயோகி

மௌனம் மனிதன் அறியாதது.

மௌனம் செயலை உச்சக்கட்டத்திற்கு உயர்த்தும்.

உச்சக்கட்டத்திற்கு உயர்ந்தும், செயல்பட முடியாத நிலை செயலுக்குகந்தது.

செயல்படுத்தாத செயலைப் போல் சிறப்பது எதுவுமில்லை.

மௌனமே மனிதன் அறியாதது. அதன் பின்னுள்ள மௌனத்தை அவன் கேட்டும் அறியான்.

அதுவும் அவனை அவன் உள்ள இடத்தில் வந்து அடையும். அந்நிலையிலும் செயல்படாதது சிறப்பு.

அடுத்த கட்டத்தில் செயல்பட்டால் அது தெய்வச் செயல்.

மனிதச் செயல் தெய்வச் செயலாவது, வாழ்வு தெய்வீக வாழ்வாவது.

மனிதச் செயல் வாழ்வுக்குரியது.

தெய்வச் செயல் பரிணாமத்திற்குரியது.

பரிணாமம் வாழ்வு தெய்வீகப் புனிதமாகப் பூரிப்பது.

அது வாழ்வு தெய்வமாகும் பாதை.

வாழ்வு தெய்வமானால் யோகம் வாழ்வாகும்.

எந்த நிலையிலும் உலகம் அவனைக் கண்காணிக்கும்.

புறம் மறந்தால் அகம் நிலையாகும்.

நிலையான அகம் நிரந்தரமான புறமாவது, வாழ்வு யோக வாழ்வாவது.

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பக்தியின் ரூபம்

நம் கருத்துகளை எழுதினால் கருத்து வரிவடிவம் பெறுகிறது. மனிதனைச் சிருஷ்டிக்கும்பொழுது இறைவன் அவன் உடலுக்குரிய ரூபத்தைத் தேடிய பொழுது இறைவன் பெற்ற ரூபங்கள் பல. இறைவன் முடிவாகத் தேர்ந்தெடுத்தது இன்று நாம் பெற்றுள்ள ரூபம். நாமம், ரூபம் என்பவை சூட்சும சக்தி வாய்ந்தவை. ஓம் சிருஷ்டியின் ரூபமான வரிவடிவம். சூரியன் ஞானத்தின் ரூபம். சூட்சுமப் பார்வைக்கு ரூபங்களும், அதற்குரிய கருத்துகளும் தெரியும். அரசியின் சிலையைச் செதுக்கிய சிற்பி சிலையின் தொடை வரும்பொழுது ஒரு சில் உடைந்து விழுவதைப் பல முறை கண்டான். சிலைகள் ரூபமானாலும், அரசியின் ஜீவன் சிலைக்குண்டு. கோவில் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்த காலத்தில் உயிருடனிருந்தவை. அவற்றிற்கு மந்திர ஜபம் ஜீவன் அளித்தது. பெண்ணின் உடல் பக்தியின் ரூபம், சிலை வடிவம் என பகவான் கூறியுள்ளார். ஒலி வடிவம், வரி வடிவம், சிலை வடிவம் ஜீவனுள்ளவை. தந்திர யோகத்தில் மந்திரப் பிரயோகமும், யந்திரப் பிரயோகமும் உண்டு. யந்திரம் என்பது யோக சக்தியைத் தாங்கி வரும் வடிவம். தந்திர யோகம் இந்தியர் பயிலும் பெரும் யோகங்களின் சாரம் இணைந்தது என்கிறார் பகவான்.

# ஏன் எனக்கு இந்தக் கஷ்டம்?

அன்னை எவருக்கும், எப்பொழுதும் கஷ்டம் கொடுப்பதில்லை. அன்பர்கள் அடிக்கடி கேட்கும் கேள்வியிது. கம்பெனியில் ஆர்டரே இல்லாமலிருந்தது. பிரார்த்தனை செய்தேன். ஏராளமான ஆர்டர் வந்தது. பணமில்லை. ஆர்டரைக் கொடுத்தவர் பணமும் கொடுக்கக் கூடாதா? என்பது கேள்வி. பணமும் வந்தபொழுது அது செலவாகி அடுத்த பிரச்சனை உருவானது நினைவிருப்பதில்லை. நாம் எதைக் கற்க வேண்டுமோ அதைக் கற்கும் சந்தர்ப்பத்தை அன்னை தருவதை ஏன் இந்தக் கஷ்டம் எனக் கேட்கிறோம். நாம் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தபின் இந்தக் கஷ்டமிராது என்பது அனுபவம். இந்தக் கேள்வியைக் கேட்பவர் கடந்த 6 மாதம், ஒரு வருடத்தில் நடந்ததை நினைத்துப் பார்த்தால் இதே கஷ்டம் 6 மாதங்களுக்குமுன் வந்தது. அப்பொழுது பணம் வேண்டுமெனக் கேட்டேன். பணம் வந்தது. போன இடம் தெரியவில்லை என்பார்கள். நாம் மற்றவர் செய்வதைச் செய்வதில்லை, செய்யத் தெரியாது, செய்யப் பிரியப்படுவதில்லை என்பதை அறியும்வரை கஷ்டம் விலகாது. வந்தது கஷ்டமில்லை, அறிவு பெறும் வாய்ப்பு. அறிவைப் பெற்றால் அடுத்த முறை இது வராது என்ற அனுபவத்தை மறந்து விடுகிறோம். நாம் இந்த நேரம் செய்ய வேண்டியதைச் செய்தபின் கஷ்டமிராது.

அந்த நேரம் அன்பர் கேள்வி வேறு:- நான் செய்ய வேண்டியதை என்னால் செய்ய முடியவில்லை. ஏன் அன்னை செய்யக் கூடாது? முடிந்ததை முழுவதும் முடித்தால் மீதியை அன்னை செய்து விடுகிறார் என்பது அனுபவம். அதையும் செய்யாதவர் கேட்கும் கேள்வியிது.